# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

### கொள்கை விளக்கக் குறிப்பு
### 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண்.15


## சிவ. வீ. மெய்யநாதன்

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# அட்டவணை

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–3 |
| 2 | சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சட்ட விதிகள் | 3–6 |
| 3 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை | 6–9 |
| 4 | தொலைநோக்கு | 9–14 |
| 5 | கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள் | 14–39 |
| 6 | துறையின் நடவடிக்கைகள் | 39–59 |
| 7 | தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 59–77 |
| 8 | நிறைவுரை | 77 |

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 78–80 |
| 2 | வாரியத்தின் பணிகள் | 80–82 |
| 3 | நிறுவன அமைப்பு | 83–85 |
| 4 | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள் | 85–96 |
| 5 | சுற்றுப்புற நீர், காற்று மற்றும் ஒலிதர கண்காணிப்பு | 96–123 |
| 6 | கழிவு மேலாண்மை கண்காணிப்பு | 123–154 |
| 7 | சட்ட நடவடிக்கைகள் | 155–156 |
| 8 | வாரியத்தின் இதர செயல்பாடுகள் | 156–159 |
| 9 | வாரியத்தால் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் | 160–182 |
| 10 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 182–192 |

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

விரிந்த வானே, வெளியே – எங்கும்
விளைந்த பொருளின் முதலே !
திரிந்த காற்றும் புனலும் – மண்ணும்
செந்தீ யாவும் தந்தோய்
தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்
செறிந்த உலகின் வித்தே !
புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை !

– பாவேந்தர் பாரதிதாசன்

### 1 . முன்னுரை

ஒவ்வொரு உயிரினமும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழலை விரும்புகிறது. மனிதனின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு சுற்றுச்சூழலுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். காலநிலை மாற்றம் உலகளவில் மனித இனம் மற்றும் இயற்கையைப் பாதிக்கும் வகையில் மிகப்பெரிய

சவாலாக விளங்குவதோடு வளரும் நாடுகளையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. காலநிலை மாற்றத்தால் பல்வேறு நாடுகள் பாதிப்படைவதோடு, அந்நாடுகளின் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது இடத்தில் உள்ள தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களில் 1.3 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், 1076 கிலோ மீட்டர் கடற்கரையை கொண்டுள்ள தமிழ்நாடு, இயற்கை மாறுபாடுகளால் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாகிறது. இயற்கை வளங்களை மிகையாக சார்ந்துள்ள நிலையில், மனித செயல்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால், சூழல் அமைப்பு மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகிறது.

தொழிற்சாலைகள், கல்வியாளர்கள், சமுதாயம் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு பங்களிப்பாளர்களின் அர்ப்பணிப்பும் கவனமும் தேவைப்படும் ஒரு முக்கிய தொடர்பிரச்சனையாக

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் இருந்து வருகிறது.

## 2. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சட்ட விதிகள்

வருங்கால தலைமுறையினரின் தேவைகளை நிறைவு செய்யும் திறனை சமரசம் செய்து கொள்ளாமல், நிகழ்காலத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வளர்ச்சிப் பாதையை உருவாக்குவதே நிலையான வளர்ச்சிப் பொருளாதாரத்தின் மற்றொரு வழிகாட்டுக் கொள்கையாகும். சுற்றுச்சூழல், சமூக, பொருளாதார அமைப்புகள் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை நிலைத்த சூழல் அமைப்பு ஏற்றுக் கொள்வதுடன், மக்களை மேம்படுத்தி அவர்களிடையே சமத்துவம் மற்றும் சமநீதி வழங்கப்படுவதையும் உறுதி செய்து, அவர்களை உலகளாவிய குடிமக்களாக உணரச் செய்கிறது.

## அ. அரசியலமைப்பில் வழிவகை

உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை முதன் முதலாக அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரித்த அரசுகளில் இந்திய அரசும் ஒன்றாகும். "சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதோடு, நாட்டின் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் அரசு முயற்சிக்கும்" என அரசியலமைப்பின் 42–வது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 48 (A)–ல் உள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுபோல், "இயற்கைச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவது, இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்" என அடிப்படைக் கடமைகளுக்கான பிரிவு 51 (ஏ)(ஜி) தெரிவிக்கிறது.

ஒரு மக்கள் நல அரசை உருவாக்குவதற்கான செயல் திட்டத்தை வரையறுத்துள்ள இந்திய அரசியலமைப்பு, மக்களின் நலவாழ்வு மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் நாட்டின்

இயற்கை வளங்களை சரியான அளவில் பயன்படுத்துவது அவசியமாகும் என்று தெரிவிக்கிறது. இதுவே, 'நிலையான வளர்ச்சி' என்ற கூற்றின் சாராம்சமாகும். இயற்கை வளங்கள் மற்றும் வாழ்வாதார அமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்புடன் வளர்ச்சிப் பணிக்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

**ஆ. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்:** சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புடைய அம்சங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடனும் 1986–ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**இ. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006:** இந்தியாவின் அனைத்து பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்படும் புதிய திட்டங்கள், புதிய செயல்பாடுகள், தற்போதுள்ள செயல்பாடுகளின் விரிவாக்கம் அல்லது நவீனமயமாக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் போது அவற்றினால்

ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு அத்திட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை விதிக்கும் நோக்கத்துடன், ஒன்றிய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**ஈ. கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை:** மீனவர் சமுதாயம் மற்றும் பிற உள்ளூர் சமுதாயங்களுக்கான வாழ்வாதாரப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில், ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் கீழ், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2011–இல் நடைமுறைக்கு வந்தது.

**3. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை:**

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் ஜூன் 1992ல் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகளின் புவி உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட முக்கியக் குறிப்பு 21–ன் படி,

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் 13.10.1995 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 335–ன் படி தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது.

சமீப காலமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவாலான நிலைமையை எதிர்கொள்வதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக சுற்றுச்சூழல் துறையை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை என அரசு ஆணை (நிலை) எண்.65, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை நாள் : 06.04.2022 மூலம் மறு பெயரிடப்பட்டுள்ளது.

**3.1 . துறையின் பணிகள்:**

- சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகளை மாநில அரசிற்காக வடிவமைத்தல்.

- பல்வேறு சுற்றுச்சூழல் தொடர்புடைய துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தி மாநிலத்திற்கான சுற்றுச்சூழல் கொள்கை திட்டங்களை உருவாக்குதல்.

- தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான முகமைகளுடன் இணைந்து, அவற்றின் பங்களிப்புடன் அறிவு மற்றும் அனுபவங்களை ஒருங்கிணைத்தல்.

- காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளவும், அதன் பாதிப்புகளை குறைப்பதற்கும் தேவையான கட்டமைப்புகளை பல்வேறு பங்குதாரர்களுடன் (தொடர்புடைய துறைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், அரசுசாரா நிறுவனங்கள்) இணைந்து உருவாக்குதல்.

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை ஆகியவற்றின் சட்டப்பூர்வ விதிகளை நடைமுறைப்படுத்துதல்.

மேலும் இத்துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்படாத, ஏனைய சூழல்

பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பணிகளை மேற்கொள்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்துத் திட்டங்களையும், தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் துறையாகவும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை செயல்படுகிறது. மேலும் தேசிய பசுமைப்படை வாயிலாக கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் முக்கிய தொடர்பு நிறுவனமாகவும் இத்துறை செயல்படுகிறது.

## 4 தொலைநோக்கு

தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை நீடித்த மற்றும் சமநிலையான பயன்பாடு மூலமாக காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளிலிருந்து மீட்டு, சிறந்த சமூகத்தை உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமாகும்.

## 4.1 பணிகள்

இயற்கை மாறுபாடுகளுக்கு எதிரான அனைத்து இடர் தணிப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும், இயற்கை வளங்கள் மற்றும் இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்குண்டான திட்டங்களைத் தயாரிப்பதும் இத்துறையின் பணியாகும்.

## 4.2 செயல்திட்டங்கள்

1) இயற்கை வளங்களைக் பாதுகாத்துப் பேணுவதுடன், நிலையான சுற்றுச்சூழல் அமைப்புகளையும் சுற்றுச்சூழலின் செயல்பாடுகளையும் பேணிக்காப்பதன் மூலம் அவற்றை இயற்கை வளங்களை நீடித்த காலத்திற்கு பயன்படுத்துதல்.
2) மாநில நிருவாகத்தின் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை தணித்தல் மற்றும் அதற்கேற்றவாறு தகவமைத்துக் கொண்டு

வாழ்வதற்கு உதவும் ஒரு முழுமையான கொள்கையை உருவாக்குதல்

3) கடற்கரை ஒழுங்குமுறைப் பகுதிக்குகந்த வகையில், கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்பு மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் மூலமாக 1076 கி.மீ நீளம் கொண்ட தமிழ்நாடு கடற்கரையை பாதுகாத்தல்.

4) கடற்கரை மேலாண்மை சேவைகள் அமைப்பு மூலம் நிலைத்த சுற்றுலா மேம்பாடு மற்றும் சிறப்பான கடலோர மேலாண்மையை உருவாக்குதல்.

5) காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் துயரைத் தணிப்பதற்கான சிறந்த நடைமுறைகளை மேற்கொள்ளும்போது, காலநிலை மாற்றத்தை அடிப்படையளவில்

மேலாண்மை செய்வதற்காக உள்ளூர் சமூகங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திறன் மேம்படுத்துதல்.

6) தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்களின் ஆதரவுடன் இயற்கை வளங்களை நிலைத்தகு முறையில் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை உருவாக்குதல்.

7) கார்பன் உமிழ்வைக் குறைக்கவும், ஒழுங்காற்று வழிமுறைகளைக் கொண்டு வருவதற்கும் பசுமைப் பரவலுக்கான செய்முறை மாதிரிகளை உருவாக்குவதன் மூலம் ஆற்றலைச் சேமித்தல் மற்றும் நுகர்வைக் குறைக்கும் ஆற்றல் திறன் மிக்க உள்கட்டமைப்புக்கான தர நிலைகளை உருவாக்குதல்.

8) வெளிப்படையான மற்றும் நம்பகத்தன்மையுடன் கூடிய சிறந்த சுற்றுச்சூழல் நிலைப்பாட்டை அடைவதற்கு ஏற்ற வலுவான மற்றும் உரிய

கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்கி, பங்குதாரர்கள் பங்கேற்பு அணுகுமுறை மூலம், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான விரைவான நடவடிக்கையினை மேம்படுத்துதல்.

9) தமிழ்நாட்டில் 'நிகர பூஜ்ஜிய கார்பன்' அளவு என்ற நிலையை அடைவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், இப்பணியில் சமூகத்தையும் இணைத்துக் கொள்வதற்கான நீண்ட கால செயல் திட்டத்தினை உருவாக்குதல்.

10) பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பல பசுமை மாதிரிகளை உருவாக்கி, ஆதாரங்களின் அடிப்படையில் அளவிடுதல் மற்றும் வலுவான தொழில் நுட்ப உத்திகளை உருவாக்குதல்.

11) எதிர்கால கணிப்புகள், பயனுள்ள கொள்கை மற்றும் முடிவெடுத்தலுக்கான காலநிலை அறிவியல் மற்றும் காலநிலை மாற்றங்களை

வகுக்க விரிவான தரவுக் களஞ்சிய உட்கட்டமைப்பை உருவாக்குதல்.

## 5. கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள்

### 5.1. காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல் திட்டம் (TNSAPCC)

தமிழ்நாடு அரசு, காலநிலை மாற்றம் ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சனை என்பதை உணர்ந்து, அதற்கான நடவடிக்கை எடுப்பதில் உறுதியாக உள்ளது. காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் முக்கியமான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் இந்த அரசுக்கு உள்ள பொறுப்புணர்வை இது எடுத்துக்காட்டுகிறது. காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டத்தை (SAPCC) செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை அரசு புரிந்துகொண்டுள்ளதோடு, மாறிவரும் காலநிலையால் ஏற்படும் வாய்ப்புகள் மற்றும் அபாயங்கள் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு காலநிலை மாற்றம்

குறித்த தமிழ்நாடு மாநில செயல் திட்டம் (TNSAPCC) 2.0 (2022–2030) உருவாக்கப்பட்டுள்ளது. அரசு உருவாக்கி செயல்படுத்த முனைந்துள்ள இலக்குகள், இலட்சியங்கள், கொள்கைகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றை காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் (SAPCC) ஒருங்கிணைக்கிறது.

காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டத்தின் கீழ்வரும் தேசிய இயக்கப் பணிகளில் காணப்படும் காலநிலைத் தொடர்பான செயல்திட்டங்களை தமிழ்நாடு அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் (TNSAPCC) பாதிக்கப்படக்கூடிய பின்வரும் ஏழு துறைகளை அடையாளம் கண்டுள்ளது :–

1. நிலையான விவசாயம்
2. நீர் வளங்கள்
3. காடுகள் & உயிர் பன்மயம்

4. கடலோரப் பகுதி மேலாண்மை

5. மேம்படுத்தப்பட்ட ஆற்றல் திறன் & சூரிய ஒளிப் பயன்கள்

6. நிலையான வாழ்விடம்

7. அறிவு மேலாண்மை

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்ட வரைவு (TNSAPCC) 2.0 ஆவணம் பேரிடர் மேலாண்மை மற்றும் பாதிப்பு தணிப்பு, நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் மாநிலத்திற்கான கூட்டு பாதிப்புக் குறியீடு ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

**5.2. நிலையான வளர்ச்சி இலக்கு 13 : காலநிலை தொடர்பான நடவடிக்கைகள்**

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை என்பது மாநிலத்தின் காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்கும் துறையாகும். காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் துயர் தணிப்பு

நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலைத்தகு வளர்ச்சி இலக்கு 13–ஐ அடைய இத்துறை பாடுபடுகிறது.

13.1. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தீங்குகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளுக்கு எதிரான தகவமைப்புத் திறனை வலுப்படுத்துவதை காலநிலை செயல்திட்டம் வலியுறுத்துகிறது.

13.2. காலநிலை மாறுபாடு தொடர்பான நடவடிக்கைகளை தேசியக் கொள்கைகள், செயல் திட்டங்கள் மற்றும் திட்டமிடுதலுடன் ஒருங்கிணைத்தல்.

13.3. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களுக்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல், பாதிப்புகளை மட்டுப்படுத்துதல், முன்னெச்சரிக்கை செய்தல் போன்றவற்றிற்கு தேவையான கல்வியறிவை வளர்த்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மனித மற்றும் அமைப்புசார் திறனை மேம்படுத்துதல்.

காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு மாநில செயல் திட்டம் 2.0 என்பது, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் நெருக்கமாக இணைந்த தகவமைப்பு மற்றும் பாதிப்பு தணிப்பு உத்திகளுக்கான மாநில செயல்திட்டமாகும். தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டம் நிலையான வளர்ச்சி இலக்குகளான 13.1, 13.2 மற்றும் 13.3–ஐ அடையத் துணைபுரிகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையுடன் இணைந்து, மாவட்ட அளவிலான பேரிடர் முன்னெச்சரிக்கைத் திட்டங்களை வகுப்பதில் அவர்களுடன் இணைந்து செயல்படுகிறது. இது தீவிர வானிலை நிகழ்வுகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை அமைப்புகளை உருவாக்க உதவுகிறது. காலநிலை மாற்றம் தொடர்பான பாதிப்புகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்ளக்கூடிய

மீள்திறனையும், தகவமைப்பையும் வலுப்படுத்துவதன் வாயிலாக தேசியக் குறியீட்டு அளவில் 'பாதிப்பின்மை நிலை' என்ற குறிக்கோளை அடைவதை நோக்கி இம்மாநிலம் வேகமாக முன்னேறி வருகிறது.

காலநிலை மாற்றத்தின் தீவிர நிகழ்வுகளால், இம்மாநிலம் கடும் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் உள்ளது. இத்தகைய பாதிப்புகளை உணர்ந்து, தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டம் 2.0, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் இடர் மேலாண்மையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

### 5.3 தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கீழ், மாநிலத்தில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தினை எதிர்கொள்ளும்

நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலாபநோக்கமற்ற மற்றும் தனித்துவம் கொண்ட "தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்"என்ற ஓர் அமைப்பை இந்த அரசு உருவாக்கியுள்ளது. இந்நிறுவனம், முதன்முதலாக ஒரு மாநில அரசின் இலட்சிய முன்னெடுப்பு அமைப்பாகவும், மாநிலத்தின் காலநிலை மாற்ற நெருக்கடிகளுக்கு தீர்வு மேற்கொள்ளும் சிறப்பு செயல் நிறுவனமாகவும், காலநிலைக் கொள்கைக்கு உடனடிக் கவனம் செலுத்தவும் மற்றும் சரிவிகித நீண்ட காலத்தீர்வுக்கு வழிவகுக்கக்கூடிய வகையிலும் செயல்படும்.

மாநிலம் முழுவதும் காலநிலை சீர்குலைவால் கடுமையாக பாதிப்புக்குள்ளாகும் சமூகங்கள், நகர்புற மற்றும் கிராமப்புற உள்கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் புதுமையான காலநிலை மற்றும் நிலைத்தன்மைத் தீர்வுகளை இந்நிறுவனம் முன்னெடுக்கும்.

இந்நிறுவனம் ஒரு வாரியத்தால் நிருவகிக்கப்படும்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலர் இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக செயல்படுவார்.

கீழ்க்காண் உயர் அலுவலர்கள் இந்நிறுவனத்தின் இயக்குநர்களாக செயல்படுவர்

- அரசு கூடுதல் தலைமைச் செயலர், நிதித்துறை
- அரசு கூடுதல் தலைமைச் செயலர், எரிசக்தித்துறை
- அரசு கூடுதல் தலைமைச் செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
- செயலர், வேளாண்மை (ம) உழவர் நலத்துறை
- அரசு கூடுதல் தலைமைச் செயலர், நீர் வளத் துறை
- தமிழ்நாடு வனத்துறையின் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறையின் சிறப்புச் செயலர் இந்நிறுவனத்தின் நிதி குறித்த

செயல்பாடுகளை மேற்கொள்ளும் சிறப்பு பணி அதிகாரியாக செயல்படுவார்.

மேலும், கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு திட்ட மேலாண்மை அலகு இந்நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

- தலைமை திட்ட இயக்குநர்
- காலநிலை மாற்ற நிபுணர்
- சதுப்பு நில நிபுணர்
- நெகிழி மற்றும் கழிவு மேலாண்மை நிபுணர்
- எரிசக்தி நிபுணர்
- சுகாதார நிபுணர்
- தகவல் தொடர்பு நிபுணர்

இந்த திட்ட மேலாண்மை அலகானது, காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகள் குறித்த நிபுணர் கருத்தை அளிப்பதுடன், உரிய காலநிலை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இத்துறையில் செயல்படுத்தப்படும் 3 இயக்கங்களின் செயல்பாட்டை கண்காணிக்கவும், தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்திற்கு உதவிகரமாக இருக்கும்.

தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனமானது, மாநிலத்தின் காலநிலை மாற்றம் தொடர்பாக நேர்மறையான மற்றும் நீடித்த மாற்றத்தை உருவாக்கவும், காலநிலை மாற்றத்திற்கெதிரான செயல்திட்ட இலக்குகளை உருவாக்கவும் மற்றும் விரிவான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு மூலம் நிலைத்த மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பிலிருந்து விரைவில் மீண்டு வருவதற்கான திறனையும் உருவாக்க இந்நிறுவனம் உறுதி பூண்டுள்ளது.

மேற்கூறிய இலக்குகளை அடைவதற்காக கீழ்க்கண்ட மூன்று மகத்தான இயக்கங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது.

1. பசுமை தமிழ்நாடு இயக்கம்
2. தமிழ்நாடு ஈர நில இயக்கம்
3. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

இந்த முதன்மை இயக்கங்களின் குறிக்கோளை அடைவதற்காக, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தணித்தல், தகவமைப்பு மற்றும் நிலையான வளர்ச்சியால் உருவாகும் இணை பலன்களை அதிகரிப்பதற்கான ஒருங்கிணைந்த செயல்திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்த தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் முனைந்துள்ளது.

## 5.4. தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழு

அரசின் அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் குறிக்கோள்களுடன் இணைந்து அமைவதை உறுதிசெய்ய, தீவிர பரிசீலனைக்குப் பின், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவினை அமைத்துள்ளது. இது இந்தியாவிலேயே காலநிலை மாற்றத்திற்காக பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட முதல் நிர்வாக குழுவாகும்.

**தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் குறிக்கோள்கள்**

1. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கான கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குதல்.
2. காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளுதல் மற்றும் பாதிப்புகளை தணிப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல்.
3. காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு அரசின் மாநில செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.
4. காலநிலை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியில் மாநில மற்றும் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

**தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் அமைப்பு**

இக்குழுவானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு மொத்தம் 26 உறுப்பினர்களை உள்ளடக்கிதாகும். பல்வேறு துறை அமைச்சர்கள், துறை சார்ந்த அரசு செயலர்கள் தேசிய

மற்றும் சர்வதேச நிறுவனங்களின் வல்லுனர்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். முதலாவது தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழு கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 03.03.2023 அன்று நடைபெற்றது.

## 5.5 பசுமை தமிழ்நாடு இயக்கம்

தமிழ்நாட்டில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவை மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்ற இலக்குடன் தமிழ்நாடு அரசு பசுமை தமிழ்நாடு இயக்கத்தை அறிவித்துள்ளது. இந்த இயக்கத்தின் கீழ், பல துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன், பல்வேறு உள்ளூர் மற்றும் பாரம்பரிய ரக மரங்களை நடும் மாபெரும் திட்டம் எதிர்வரும் 10 ஆண்டுகளில் மக்கள் இயக்கமாக உருவாக்கப்படும்.

## 5.6 தமிழ்நாடு ஈர நில இயக்கம்

தமிழ்நாட்டில் ஈர நிலங்களை சுற்றுச்சூழல் அடிப்படையில் மீட்டெடுக்கும் நோக்கத்துடன், ஈர நிலங்களைக் கண்டறிந்து வரைபடம் தயாரித்து, வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல் சமநிலையை ஈர நிலங்களில் மீட்டெடுக்கும் பணி இந்த இயக்கத்தின் கீழ் 5 ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளப்படும். இந்த இயக்கத்தின் கீழ், எண்ம முறை தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஈர நிலங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு பணி, உள்ளூர் சமூகங்கள் மற்றும் பிற தொடர்புடைய அனைத்துப் பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஒரு பங்கேற்பு செயல்திட்டமாக மேற்கொள்ளப்படும்.

## 5.7 தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதும், அவற்றின் பாதிப்புகளை தணிப்பதும்

தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டிய அம்சமாகும். 2021–2022–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் போது, காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மொத்தம் ரூ.500 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி மாநிலங்களின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் மேலும் நீண்ட கால அடிப்படையில் தக்கவைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்" டிசம்பர் 9, 2022–ல் துவக்கி வைக்கப்பட்டது. இந்திய மாநிலங்களை பொறுத்தவரை, தமிழ்நாட்டில் தான் முதல் முறையாக இது போன்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தின் உயர் மட்டத்தில், மாநில மக்களுக்கு நிலையான மற்றும் காலநிலை

மாற்றத்திற்கு ஏற்ற எதிர்காலத்தை உருவாக்க தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது. மாநிலத்தின் காலநிலை மாற்றப் பிரச்சனைகளை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை தலைமையில் இந்த இயக்கம் செயல்படும்.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் கீழ் வரும் செயல்பாடுகளுக்காக 2021–2022 மற்றும் 2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ 77.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ள 2021–2022–ஆம் ஆண்டில் ரூ 1.85 கோடி நிதி ஒதுக்கப்பட்டு சென்னை, இந்திய தொழில் நுட்ப நிறுவனம், காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை, அண்ணா பல்கலைக்கழகம், உலக வள நிறுவனம் மற்றும் தேசிய கடலோர நிலைத்திட்ட கடற்கரை மேலாண்மை மையம் போன்ற நிபுணத்துவம் மிக்க நிறுவனங்களின் ஆலோசனையுடன் செயல்படுத்தப்படுகிறது.

2022–2023–ஆம் ஆண்டுக்கான பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.75.5 கோடிக்கான விவரங்கள் பின்வருமாறு:

5.7.1 **பங்குதாரர்களின் கருத்தரங்கம்**: உள்ளூர் சமூகங்கள் மற்றும் அரசாங்கத் துறைகளுக்கான திறன் மேம்பாட்டு கருத்தரங்கம் நடத்துதல். காலநிலை மாற்றத்தால் உடனடி பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களில் உள்ள துறைகளின் தகவமைப்பு மற்றும் தணிப்பு திட்டமிடலுக்கு முன்னுரிமை அளித்தல். மண்டல மற்றும் உலகளாவிய சூழல் அடிப்படையிலான அறிவியல் ஆதாரங்களை முன்னிலைப்படுத்துதல், சமூக, காலநிலை மாற்றப் பாதிப்பிலிருந்து மீளும் திறனை உருவாக்குவதற்காக இயற்கை அடிப்படையில் தேவைப்படும் வெற்றிகரமான, சுயமான/ தொழில்நுட்ப உத்திகளை உருவாக்குதல்.

**5.7.2 இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப கடலோர வாழ்விடங்களை மறுசீரமைப்பு செய்தல்:** சவுக்கு, பனை, முந்திரி மற்றும் பிற சிறப்பு இனங்களை நடவு செய்வதன் மூலம் உயிர் கேடயங்களை உருவாக்குதல். கடலோர மாவட்டங்களில் உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்புகளில், வளரக்கூடிய அலையாத்திக் காடுகளை வளர்ப்பது. கடல் புல் மற்றும் பவளப்பாறைகளின் வளர்ச்சியைப் பாதுகாத்து மேம்படுத்துவது. தமிழ்நாட்டின் நிலையான கடற்கரை மேலாண்மைக்கான செயல் திட்டத்தை உருவாக்குவது மற்றும் இதற்குரிய புவி வரைபடம் தயாரிப்பது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**5.7.3. கார்பன் செறிவூட்டல் திட்டம்**

நிலத்தில் கார்பன் சேமிப்பு என்பது ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் சேவையாகும். இது மண்ணின் ஊட்டச்சத்துக்களை அதிகரிக்கவும்,

நிலத்தடி நீரை மேம்படுத்தவும் மற்றும் கணிசமான அளவு கார்பனை சேமித்து தாவரங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தலிலும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை பெருங்குடியில், உயிர்க்கழிவு அகழ்ந்தெடுக்கும் அமைப்பினை சென்னை பெருநகர மாநகராட்சி அமைத்துள்ளது. பல வருடங்களாக தேங்கியுள்ள நகராட்சி திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்த பின்னர் பெறப்பட்ட மண்ணில், ஊட்டச்சத்துக்கள் மற்றும் கார்பன் அதிக அளவில் உள்ளது. நன்மங்கலம் வனப்பகுதியில் வனத்துறை, சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து, வளங்குன்றிய காடுகளில் உயிர் செறிவூட்டப்பட்ட மண்ணைச் சேர்த்து, மரங்கள் மற்றும் காடுகளின் வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒரு மாதிரித் தளம் அமைக்க இம்முன்னோடித் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.7.4. நிலையான வாழ்விடம்

நம் வாழ்விடத்தின் சுற்றுச்சூழல் நலனை இனியும் புறக்கணிக்க முடியாது என்பதை உணர வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது. மேலும் நமது சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க பசுமைக் கட்டட நடைமுறைகளின் நன்மைகளை உணர வேண்டும்.

அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், தனி வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றில் எரிசக்தி சேமிப்பை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவற்றிலிருந்து வெளியாகும் பசுமைக்குடில் உமிழ்வை குறைத்து காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைத்தல் வேண்டும். இதனடிப்படையில் எரிசக்தியைச் சேமிக்கும் விளக்குகள் மற்றும் மின்சாரத்தின் அவசியத்தைப் பற்றி குடியிருப்பாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கட்டுமான பணி மேற்கொள்பவர்களுக்கு

குறைந்த செலவில் காலநிலைக்கேற்ற கட்டடக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக கருத்தரங்குகள் மூலமாக பயிற்சி அளித்தல், ஆற்றல் திறன் கொண்ட வீடு கட்டும் திட்டங்களை உருவாக்குவதற்கு நிலையான வழிகாட்டு நடைமுறையை உருவாக்குதல் மற்றும் பசுமைக் கட்டட மதிப்பீட்டு முறையினை ஒரு முன்னோடித் திட்டமாக உருவாக்குதல் ஆகியவை புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும்பணிகளாகும்.

**5.7.5. காலநிலை குறித்த கல்வியறிவு மற்றும் சர்வதேச காலநிலை உச்சி மாநாடு** – காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் பாதிப்புகளை தணிக்கும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், காலநிலை அறிவியல் மற்றும் தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாணவர்களுக்கு கற்பித்தல், ஊடகங்கள், குறும்படங்கள் மற்றும் செயலிகள் மூலமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தணிப்பதற்கான நடைமுறைக்கேற்ற

சிறந்த தீர்வுகளை அறிமுகப்படுத்துதல், பசுமை தினக் கொண்டாட்டங்களின் போது காலநிலை வேறுபாடு குறித்த குழு விவாதங்கள் நடத்துதல், கணினி வழி பதாகைகள் உருவாக்குதல், தெரு நாடகங்கள், பொது விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துதல் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துதல் ஆகியவையும் காலநிலை மாற்ற பாதிப்புத் தடுப்புக்கான சிறந்த நடைமுறைகளாகும். சமூக அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகிய பங்குதாரர்களுடன் இணைந்து காலநிலை மாற்றம் தொடர்புடைய முக்கிய நிகழ்வுகளான உலக சுற்றுச்சூழல் நாள், உலக தண்ணீர் நாள், புவிநாள் போன்ற கொண்டாட்டங்களின் வாயிலாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

### 5.7.6. காலநிலைத் திறன்மிகு கிராமங்கள்

சமூக அளவில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்காக பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புடன்

முன்மாதிரி வாழ்விடங்களாக காலநிலைத் திறன்மிகு கிராமங்கள் உருவாக்கப்படும்.

பஞ்சாயத்து அளவில் நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதற்காக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்தி சுத்தமான, சுற்றுச்சூழலை பாதுகாக்கும், பசுமையான கிராமங்களை நமது எதிர்கால குழந்தைகளின் நலனுக்காக உருவாக்க வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் மேலும் சீர்கெடுவதை தடுக்கவும் உள்ளூர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இயற்கை மூல வளங்களின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் பல பங்குதாரர்களின் பங்களிப்புடன் பின்வரும் நோக்கங்களுக்காக இந்த முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்:

அ) கிராமங்களிலுள்ள இயற்கைச் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல்

ஆ) காலநிலை இடர்களுக்கு உள்ளாகும் உள்ளூர் சமூகத்தினர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பாதிப்புகளை புரிந்து கொள்ளுதல்.

இ) காலநிலை மீள்தன்மையை உருவாக்குவதற்கும், தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் தேவையான எதிர்கால தீர்வுகளை உருவாக்குதல்.

ஈ) வேளாண் ஆலோசனைகள் உள்ளிட்ட, கிராம அளவிலான காலநிலை தகவல் மையத்தை அமைப்பது போன்ற கிராம / சமூக அளவிலான வேளாண் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார தீர்வைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.

உ) வேளாண் வனவியல், நிலப் பயன்பாடு, கால்நடை மேலாண்மை மற்றும் உயிரி எரிபொருட்களின் சிறந்த மேலாண்மைக்கான கார்பன்/ஊட்டச்சத்து சார்ந்த சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

ஊ) உழவர்களுக்கிடையே தகவல் பரிமாற்றத்தின் மூலம் காலநிலை மாற்றம் மற்றும் சந்தைத் தகவல்களை அறிந்து கொள்ளல் போன்ற நிறுவன / சந்தை சார்ந்த செயல்பாடுகள்.

எ) களநிலையிலான காலநிலை சார்ந்த செயல்பாடுகளை திறன்மிகு கிராமங்களிலிருந்து அறிந்துகொள்ளுதல் மூலம், பல்வேறு அரசுத் திட்டங்களை மாநில அளவில் சிறப்பாகச் செயல்படுத்த உதவுதல்.

**5.7.7. காலநிலை மாற்ற பாதிப்பை மீட்டெடுக்கும் பசுமை புராதனச் சின்னங்கள்** – புராதனச் சின்னங்களில் தட்பவெப்ப நிலைத் தணிப்பு மற்றும் மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மாதிரி செயல் விளக்கம் செய்வதற்காக, இரண்டு கோயில்களில் இத்திட்டம் முன்னெடுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் இரண்டு கோயில்களில் சூரிய சக்தி விளக்குகள், நீர் மேலாண்மை, வெப்ப மேலாண்மை, பசுமையாக்குதல்,

கோயில் குளங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, நெகிழி மற்றும் நுண்நெகிழி அகற்றுவதற்கான செயல்பாடுகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்த கோவில் நந்தவனங்களை வளப்படுத்துவதும் இதில் அடங்கும். இந்த முன்னோடித் திட்டம், பண்பாடு விழுமிய மரபு சார்ந்த கட்டடங்களை, காலநிலை மாற்றத்திற்கேற்ப சிறப்பாக மாற்றுவதற்கான முன்னோடித் திட்டமாக விளங்கும்.

## 6. துறையின் நடவடிக்கைகள்

### 6.1 கடலோர மண்டல மேலாண்மை

தமிழ்நாடு 1076 கி.மீ. நீளமுள்ள, பரந்த கடற்பகுதியைக் கொண்டுள்ளது. இது இந்திய கடலோரப் பகுதியில் 15 சதவீதம் ஆகும். இது சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள், கடற்பாறைகள், கடற்புற்கள், உப்பு நிலங்கள், மணல் தேரிகள், மணல் குன்றுகள் போன்ற பல்வேறு வகையான கடலோர வாழ்விடங்களைக் கொண்டுள்ளது.

கடலோர மற்றும் கடல் பகுதிகளில் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான நிர்வாகத்தை ஊக்குவிக்க, பல ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகிறது. கடலோர செயல்முறைகள், கடற்கரை மேலாண்மை, கடலோர பாதிப்பு மற்றும் அபாயங்கள் தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் ஆகியவை இதன் முக்கிய நோக்கமாகும்.

**6.1.1. நிலையான வளர்ச்சி இலக்கு 14 – கடல்வாழ் உயிரினங்கள்**

கடல்சார் மற்றும் கடற்கரை சூழலியலமைப்பை நிலைத்த தன்மையுடன் பாதுகாப்பதற்காகவும், அதனை குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளிலிருந்து தவிர்ப்பதற்காகவும் நிலையான வளர்ச்சி இலக்கு 14 பின்வரும் நடவடிக்கைகளை வலியுறுத்துகிறது :–

14.1 கடலில் ஏற்படும் அனைத்து வகையான மாசுபாடுகளையும் தடுத்தல் மற்றும் குறிப்பிடத்தக்க அளவு குறைத்தல்.

14.2 கடல்சார்ந்த, கடலோர சமச்சீர் சூழலை குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக நீடித்த மேலாண்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

14.3 அனைத்து நிலைகளிலும் மேம்பட்ட அறிவியல் வழிமுறைகள் மூலமாக கடல் அமிலமயமாவதால் உண்டாகும் தாக்கங்களை கண்டறிந்து அவற்றைக் குறைத்தல்

### 6.1.2. தொழில்நுட்ப செயல்பாடுகள் – புவியியல் தகவல் அமைப்பு (Geographincal Information System)

உலக வங்கி நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் அவசரகால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழல் துறையானது, ஒரு புவியியல் தகவல் அமைப்பு பிரிவை துவக்கியுள்ளது. அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்டம்/பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின் செயல்பாடுகளான தமிழகத்தின் கடலோரப் பகுதிகளின் உயர் அலைக் கோட்டினை

வரையறுத்தல், ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல், கடலோர பாதிப்பு வரைபடங்கள் தயாரித்தல், உயர் அலை கோடுகளில் கல்தூண்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள், புவியியல் தகவல் அமைப்பு பிரிவு மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் ஒரு மாநில அமைப்பு ஆகும். கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் ஏற்படும் விதிமீறல்களைக் கண்காணித்தல், வரைபடங்களை தயார் செய்தல், அறிக்கைகள் சமர்ப்பித்தல் போன்ற பணிகளில் பசுமைப்படைக்கு (Green Squad) உதவியாக புவியியல் தகவல் அமைப்பு செயல்படுகிறது. இவ்வமைப்பு, உள்ளூர் அளவிலான வரைபடங்கள் மூலம் திட்டங்கள் தொடர்பான இடங்களை சுட்டிக்காட்டுவதில், தொழில்நுட்ப வல்லுநர் குழுவுக்கும், தமிழ்நாடு

கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுவுக்கும் பணி செய்து வருகிறது.

### 6.1.3 கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (Coastal Zone Management Plan)

கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்கவும் மற்றும் கடலோரப் பகுதிகளில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் கீழ் வெளியிடப்பட்ட, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அறிவிக்கை எண்.19(E), நாள். 06.01.2011 மூலம் வெளியிடப்பட்டது.

இவ்வறிவிக்கையின்படி கடற்பகுதிகள் 5 வகை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–I (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை)

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–II (வளர்ச்சியடைந்த பகுதி)

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–III (ஊரகப் பகுதி)

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–IV (கடல்நீர் பகுதியில் உயர் அலை கோட்டிலிரு , நாட்டின் கடல் எல்லை பகுதிக்கு (12 நாட்டிகல் மைல்கள்) இடைப்பட்ட கடல் பகுதி மற்றும் அலை தாக்கமுள்ள நீர்நிலைப்பகுதிகள்)

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–V சிறப்புக்கவனம் செலுத்தி பாதுகாக்கப்பட வேண்டிய குறுகிய கடல் சூழல் பகுதிகள்

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின் படி, மாநில அரசால் கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் என்பது அவசியமான ஒன்றாகும்.

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011–ன் வழிமுறைகளின் படி, தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களுக்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மை திட்டம் தயாரிக்கும் பணி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும்

காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஏற்பு பெற்ற நிறுவனமான சென்னையில் உள்ள தேசிய கடலோர நிலைத்தகு மேலாண்மைக்கான மையத்திடம் (National Centre for Sustainbale Coastal Management) வழங்கப்பட்டது.

தேசிய கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்தின் பரிந்துரைகளின்படி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு 24.10.2018 அன்று ஒப்புதல் வழங்கியது. 117 வரைபடங்களை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டம் சுற்றுச்சூழல் துறையின் (www.environment.tn.nic.in) (http://tnenvis.nic.in) வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் மென்பொருள், மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் மற்றும் தொடர்புடைய

துறையினருக்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019 விதிகளின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. அதன்படி, தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினை 1:25000 என்ற அளவில் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019ன் படி தயாரிக்கும் பணியினை, 1.82 கோடி ரூபாய் செலவில், ஒன்றிய அரசின் தேசிய கடலோர நிலையான மேலாண்மை மையம் மேற்கொண்டு வருகிறது.

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை 2019–ன்படி தயாரிக்கப்படும் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும்வரை, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011–

ன்படி தயாரிக்கப்பட்ட, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினைப் பின்பற்றுமாறு ஒன்றிய அரசு, அனைத்து மாநிலங்களையும் அறிவுறுத்தியுள்ளது.

### 6.1.4 உள்ளூர் அளவிலான கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தின் கீழ் உள்ளூர் அளவிலான ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினை 1:4000 அளவிலான வரைபடங்களை, 2.99 கோடி ரூபாய் செலவில் தயாரிப்பதற்கான ஏற்பாணையினை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையத்திற்கு, தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அனுமதி அளித்தது. இப்பணியினை அண்ணா பல்கலைக்கழக தொலையுணர்வு மையம் முடித்ததைத் தொடர்ந்து, கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை, 2011ன்படி தயாரிக்கப்பட்ட உள்ளூர் அளவிலான வரைபடங்கள்

கடற்கரை மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதற்காக, அனைத்து கடற்கரை மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள், தொடர்புத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட மற்ற அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 6.1.5 கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் ஒழுங்குமுறை விதிகளை நடைமுறைப்படுத்துதல்

கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகளானது, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கடலோர ஒழுங்கு முறை மண்டல அறிவிக்கை, 2011–ல் கூறப்பட்டுள்ளவாறு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த விதிமுறைகளை அறிவியல் முறையிலான கொள்கைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக, கடலோரப் பகுதிகள், அதன் தனித்துவமிக்க சுற்றுச்சூழல் மற்றும் கடல் பகுதிகள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் இந்த

விதிமுறைகள் கடலோரப்பகுதிகளில் வசிக்கும் மீனவ சமூகத்தினர் மற்றும் உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பை அளிக்கும் நோக்கத்தோடு நடைமுறைப் படுத்தப்படுகிறது. தமிழ்நாடு ஒரு கடலோர மாநிலமாக விளங்குவதால், இந்த விதிமுறைகள், மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள கடலோரப் பகுதி மேலாண்மை அமைப்புகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம் (Tamil Nadu State Coastal Zone Management Authority)**

கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், அப்பகுதிகளின் விதிமீறல்களைக் கண்காணிக்கவும், மாநில அளவிலான கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின்

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலாளர் / கூடுதல் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்டு இக்குழுமம் செயல்படுகிறது.

**மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம்**
**(District Coastal Zone Management Authority)**

மாநில அரசு, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்களை 1998–ஆம் ஆண்டு அமைத்துள்ளது. இக்குழுமங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூடி கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கைகள் குறித்த பொருண்மைகள் மீது முடிவுகள் மேற்கொள்கின்றன.

**தொழில் நுட்ப வல்லுநர் குழு (Technical Expert Committee)**

தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்தின் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்படும் விண்ணப்பங்களை முன் ஆய்வு செய்யவும் கடற்கரை ஒழுங்குமுறைப் பகுதி தொடர்பான நீதிமன்ற வழக்குகளை ஆய்வு செய்யவும் 13.06.2022 நாளிட்ட சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை (சு.சூ-3)-ன் அரசாணை (நிலை) எண்.100-ல், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அரசு நியமித்துள்ளது.

**6.2. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை (Environment Management Agency of Tamil Nadu)**

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணிக்கவும், அவற்றை செயல்படுத்தவும் "தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை

முகமை" தமிழ்நாடு அரசால், 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இம்முகமை, பள்ளிகளில் சுற்றுச்சூழல், கடலோரப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் சூழல் மீட்புப் பணிகள் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சிகள், நகராட்சிகள், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நிதி, மாசுக் கட்டுப்பாடு வாரிய நிதி, அரசின் மானியம் உள்ளிட்ட நிதி மூலமாக பல்வேறு ஒத்த துறைகள் / உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து, நீர்நிலைகளில் சூழல் மீட்புப் பணிகளை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை செயல்படுத்தி வருகிறது. இது ஒரு தன்னாட்சி நிறுவனம் என்பதால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்குள் ஒரு தொடர்பை ஏற்படுத்தி

திட்டங்களை திறம்பட செயல்படுத்த வழிவகை செய்கிறது.

### 6.3 தேசிய பசுமைப்படை (National Green Corps)

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 1998 ஆம் ஆண்டு, முதன்முறையாக சூழல் மன்றங்கள் துவங்கப்பட்டன. சூழல் மன்றங்கள் வெற்றிகரமாக செயல்பட்டதன் அடிப்படையில், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 2002 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் சூழல் மன்றங்களை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளில், 8000 தேசிய பசுமைப்படைப் பள்ளிகளிலுள்ள சுமார் 4 இலட்சம் மாணாக்கர்கள் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டு, தேசிய பசுமைப்படையின் நடவடிக்கைகள்

கண்காணிக்கப்படுகின்றன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மரங்கள் நடுதல், பசுமைத் தினங்கள் கொண்டாடுதல், சூழல் போட்டிகள், சூழல் சுற்றுலா போன்ற சமுதாய மற்றும் பள்ளிகள் சார்ந்த நிகழ்ச்சிகளில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்கள் மூலம் உள்ளூர் பூர்வீக மரங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்ட ஊட்டச்சத்து மிக்க தோட்டங்களை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் உதவுகின்றன.

## 6.4 மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Environment Impact Assessment Authority of Tamil Nadu)

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ன் படி சில புதிய திட்டங்களுக்கும், ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள திட்டங்களை விரிவாக்கம் செய்ய அல்லது நவீனமயமாக்குவதற்கும், சுற்றுச்சூழல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்பின் அடிப்படையில்

சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுவது கட்டாயமாகும். இவ்வறிக்கையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 'அ' பிரிவு இனங்களுக்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்தும், 'ஆ' பிரிவு இனங்களுக்கு அதன் செயல்பாடுகளைச் சார்ந்து மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்தும் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மாசுபாடுகளைக் குறைக்கத் தேவையான திட்டங்களை ஆராய்ந்து சுற்றுச்சூழல் முன் அனுமதி வழங்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் அவ்வாணையத்திற்கு உதவ மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றை அமைக்க சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, இத்திட்டங்களை ஆய்வு செய்து அதன் பரிந்துரைகளை மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) வழங்கும். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ விதிகளுக்குட்பட்டு திட்டங்களுக்கு, சுற்றுச்சூழல் முன் அனுமதியை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கும். ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் 11.01.2022 நாளிட்ட அறிவிக்கை எண். 146–ன் படி, தற்போதைய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மூன்று உறுப்பினர்களையும், மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 12 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆணையம் மற்றும் மதிப்பீட்டுக்குழு மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும்.

சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் நடைமுறையில் செயல்திறன், எளிமை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்த வெளிப்படையான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. திட்டப்

பயனாளிகள் மற்றும் பொதுமக்கள், தங்களது பணிகளை சுலபமாக மேற்கொள்ளவும், தங்களது விண்ணப்பங்களின் நிலையை எளிதாக அறிந்து கொள்ளவும், ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட "PARIVESH" என்ற இணையதளத்தை தமிழக அரசு பயன்படுத்தி இதற்கு வழிவகுக்கிறது.

**6.5 சுற்றுச்சூழல் தகவல் மையம் (Environmental Information System –ENVIS)**

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால், 1982–ல் ஒன்றிய அரசு திட்டமான சுற்றுச்சூழல் தகவல் மையம் என்ற அமைப்பை நிறுவியது. தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதியுதவியுடன் 2002–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சுற்றுச்சூழல் துறையில் இயங்கி வருகிறது.

தமிழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் அதன் தொடர்புடைய பல்வேறு தகவல்களை இம்மையம் வழங்கி வருகிறது. தகவல்கள் சேகரித்தல், ஒப்பிடுதல், சேமித்தல், சீர்படுத்துதல் மற்றும் www.tnenvis.nic.in என்ற வலைதளத்தின் மூலம் சுற்றுச்சூழல் தகவல்களைப் பரப்புதல் ஆகிய பணிகளில் இம்மையம் ஈடுபட்டுள்ளது. செய்திமடல் வெளியிடுதல், வலைதளம் சார்ந்த தகவல் தொகுப்புகளை உருவாக்குதல், விழிப்புணர்வு பிரசுரங்கள், சுற்றுச்சூழல் அறிக்கை, சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வு செயல்பாடுகள் போன்றவை சுற்றுச்சூழல் தகவல் மையத்தின் நடப்பில் உள்ள திட்டங்களாகும்.

"சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, கொள்கை, திட்டம் மற்றும் முடிவு மதிப்பீடு ஆகியவற்றுக்கான உதவி அமைப்பு" என்ற திட்டத்தின் கீழ் செயல்பட்டு வந்த சுற்றுச்சூழல் தகவல் மையம் தற்போது ஜீன் 2022–ல், 2021–22 முதல் 2025–26 ஆண்டு வரை ஒப்புதல் வழங்கப்பட்ட "மறுசீரமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் கல்வி, விழிப்புணர்வு ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாடு" என்ற

திட்டத்துக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. "சுற்றுச்சூழல் தகவல்கள், விழிப்புணர்வு, திறன் கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்கள்" ஆகியவை இந்த மறுசீரமைக்கப்பட்ட கூறுகளில் ஒன்றாகும்.

## 7. தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 7.1 மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கம்

காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்டந்தோறும் காலநிலை மாற்ற இயக்கங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 3.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தை செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மாவட்ட இயக்கத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், மாவட்ட வன அலுவலர் மாவட்ட காலநிலை அலுவலராகவும் செயல்படுவார்கள்.

**மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கத்தின் நோக்கங்கள் :–**

1) மாநில செயல்திட்டத்தை செயல்படுத்த மாவட்ட அளவில் அனைத்து துறைகளுடன் இணைந்து மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் செயல்படும்.

2) தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தின் (TNGCC) திட்ட மேலாண்மை அலகுடன் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் இணைந்து செயல்படும்.

3) காலநிலை திறன் மிகு கிராமங்கள், தட்ப வெப்ப நிலையை தாங்கும் பசுமைக் கோயில்கள், பசுமைப் பள்ளிக்கூடங்கள், உயிரி கேடயத்தை உருவாக்குதல், நீலக்கொடித் திட்டம், நிலையான வாழ்விடம், கார்பன் செறிவூட்டல் திட்டம் மற்றும் கழிவு மின் ஆற்றல் உற்பத்தி செய்தல் போன்ற திட்டங்களில் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் தமிழ்நாடு காலநிலை

மாற்ற இயக்கத்தின் செயல்பாடுகளுடன் இணைந்து செயல்படும்.

4) மாவட்ட அளவில் காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அளவிலான பங்குதாரர்களுக்கான கருத்துப் பட்டறைகள் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவியுடன் நடத்தப்படும்.

**மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கத்தின் செயல்திட்டங்கள்**

அ) மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டங்களுடன், காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்பு தணிப்பு செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

ஆ) திறன் கட்டமைத்தல் மற்றும் நிறுவன திறனை மேம்படுத்துதல்.

இ) காலநிலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு கட்டமைப்பை உருவாக்குதல்.

**எதிர்நோக்கும் பலன்கள்**

1. மாவட்ட அளவிலான காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளை தணிப்பதற்கான திட்டத்தை தயாரித்தல்

2. கார்பன் குறைப்பு, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கான திட்டங்கள், துறை வாரியான திட்டங்களை ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கு தேவையான தரவுகளை அளித்தல் மற்றும் மாநில அரசின் காலநிலை கொள்கைக்கேற்ப செயல்படுவதை உறுதி செய்தல்.

3. கீழ்மட்ட அளவில் காலநிலை குறித்த கல்வியறிவை உருவாக்குதல்

4. காலநிலை திறன்மிகு கிராமங்களை உருவாக்குதல்

**7.2 மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம்**

தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளை தணிப்பதற்காக எடுக்கப்படும் பல்வேறு புதிய முயற்சிகளில் சிறப்பாகச் செயல்படும் இளைஞர்களை ஈடுபடுத்துவது அவசியம் என அரசு உணர்ந்துள்ளது. இளைஞர்களின் கையில் எதிர்கால இந்தியா உள்ளது என்பதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் பசுமைப் புத்தாய்வு திட்டம் மூலம் சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு பிரச்சனைகளை அணுகி தீர்வு காணும் வகையில் இயற்கை மற்றும் இயற்கையில் ஆர்வமுள்ள இளைஞர்களை அடையாளம் கண்டு அவர்களை காலநிலை மாற்றம் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்த முனைந்துள்ளது.

இளைய தலைமுறையினர் மற்றும் மாணவர்களை ஈர்ப்பதற்கான வழிமுறைகள் மூலம், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கவும், இயற்கையைப் பாதுகாக்கவும் தேவையான பசுமைக்கு வளம் சேர்க்கும் யோசனைகளை உருவாக்குவதும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாதிப்புகளை குறைப்பதும் இத்திட்டத்தின் இலக்காகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த பசுமை புத்தாய்வுத் திட்டம் தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வு திட்டத்தில் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து பணிகளும், சுற்றுச்சூழல் துறை மற்றும் காலநிலை மாற்ற இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படும். காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும்

பாதிப்புகளை தணிக்கும் செயல்பாடுகளில் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கப் பணிகளுக்கு பசுமைத் தோழர்கள் தேவையான உதவிகளை வழங்குவார்கள்.

## 7.3. பசுமைப் பள்ளிக்கூடத் திட்டம்

காலநிலை மாற்றம் என்பது நாம் எதிர்கொள்ள வேண்டிய யதார்த்தம் என்பதால், இளைய தலைமுறையினர் மற்றும் சிறுவர்கள் அதனை ஏற்பதற்கும் அதன் பாதிப்புகளை தடுப்பதற்கும் தயாராக வேண்டியது அவசியமாகும். பசுமைப் புரட்சி என்பது இளைய தலைமுறையில் இருந்து உருவாக வேண்டும்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் 03.10.2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.174–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமை திட்டத்தை செயல்படுத்த 25 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த பள்ளிகளில் சூரிய ஒளி விளக்குகள், சூரிய ஒளி பம்புகள் மற்றும் சூரிய ஒளி போர்வெல் போன்றவற்றைப் பயன்படுத்தி

எரிசக்தியை சேமித்தல், மழைநீர் சேமிப்பு, உரம் தயாரித்தல், காய்கறி தோட்டம் உருவாக்குதல், மருத்துவ தோட்டம் உருவாக்குதல் மற்றும் பழ மரங்கள் நடுதல், குறைவான நீர் பயன்பாடு, கழிவுநீர் மறுசுழற்சி, பிளாஸ்டிக் இல்லாத சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு பசுமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த பசுமை பள்ளி திட்டத்தின் முன்னெடுப்பு மற்ற பள்ளிகளுக்கு வழிகாட்டியாக அமைவதோடு, இப்பள்ளிகள் பசுமைப் பள்ளிக் குறியீட்டில் தரவரிசைப்படுத்தப்படும். பசுமைப் பள்ளி திட்டமானது, பள்ளிக் கல்வித்துறை மூலமாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 பள்ளிகளில் தலா 20 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**7.4 காலநிலை மையம் (Climate Studio) :**

அண்ணா பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றம் மற்றும் அது தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆய்வு

மையம், 'காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வு மையம்' என தமிழ்நாடு அரசால் மறுபெயரிடப்பட்டது. இச்சிறப்பு ஆய்வு மையம், காலநிலை மாற்றம் குறித்த அறிவை மேம்படுத்தி, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நமது திறனை வலுப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளும்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வு மையத்தினை (CCCDM), காலநிலை மாற்றம் சார்ந்த அறிவு மேலாண்மைக்கான நிபுணத்துவம் வாய்ந்த அரசு சார்பு நிறுவனமாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் (TNSAPCC) அடையாளம் கண்டுள்ளது.

இம்மையத்தில் காலநிலை மாதிரியாக்கத்திற்கான உயர் செயல்திறன் கணக்கீட்டு வசதிகள் மற்றும் தரவுகள் சேமிப்பதற்கான துணைக்

கருவிகளுடன் கூடிய காலநிலை மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

**காலநிலை மையத்தின் நோக்கங்கள்**

- தமிழ்நாடு முழுமைக்குமான, நுண் அளவு கொள்கை திட்டமிடலுக்குத் தேவையான உயர் தரம் மிக்க, நுணுக்கமான, மண்டல அளவிலான காலநிலை தொடர்பான தகவல்களை திரட்டி அளித்தல்.
- IPCC–யின் தொடர் மதிப்பீடு அறிக்கைகளின் அடிப்படையில் வேளாண்மை, நீர் வளம், வனம் மற்றும் பல்–உயிரினம் மற்றும் கடலோர மண்டலம் போன்ற இயற்கை வளங்களின் மீது காலநிலை மாற்றத்தின் பாதிப்பு குறித்து குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்தல்.
- மேற்படி மதிப்பீடுகளை மேற்கொள்ள புவி தகவல் தரவு அடிப்படையில் தகவல்கள் பெறப்பட்டு,

அவற்றிலிருந்து அறிவியல் வழியிலான அறிக்கைகள் தயாரிக்க நீர் வளத்துறையில் MIKE SHE மற்றும் SWAT, வேளாண்மை துறையில் DSSAT மற்றும் கடலோர மேலாண்மையில் SimCLIM மற்றும் வனத்துறையில் MAXENT எனப்படும் மென்பொருட்களைப் பயன்படுத்தி காலநிலை மாற்றம் தொடர்பான ஒரு தெளிவை அடைவதுடன், காலநிலை மாற்றத்தினால் எதிர்காலத்தில் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அழிவுகளைக் கணித்தல் மற்றும் இயற்கை வளங்கள், சூழல் அமைவிடங்களில் நிகழும் மாற்றங்களைக் கணக்கிடுதல்.

- திட்டமிடல் நிபுணர்கள் மற்றும் அறிவியலாளர்கள், தன்னார்வு நிறுவனங்கள் மற்றும் சமூகத்தினர் ஆகியோர் இது குறித்து அறிந்து கொள்வதற்காக மாநில மொழிகளில் தகவல்களை அளித்தல்.

**காலநிலை மையத்தின் செயல்பாடுகள்**

- தேசிய, மாநில மற்றும் உள்ளூரளவில், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை உரிய ஆதாரங்களுடன் அளித்தல்.
- நீர்வளம், வேளாண்மை, வனவியல், கடலோர, நகர்ப்புற வாழ்விடம், சுகாதாரம் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் போன்ற துறைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான திட்டமிடல் மற்றும் பாதிப்புக்குள்ளாவதை ஈடுசெய்யத்தக்க பணிகளுக்கு தேவையான அறிவியல் ஆற்றலை உருவாக்குதல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்கள், தொழில்நுட்பங்களை பரிமாறிக்கொள்ளவும் ஒருங்கிணைந்து ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடவும், அனைத்து ஆய்வு நிறுவனங்களை

உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தகவல் மையமாக உருவாக்குதல்.

**காலநிலை மையத்தினால் எதிர்நோக்கும் பலன்கள்**

- மாவட்ட, வட்டார அளவிலான காலநிலை மாற்றத் தகவல்களை பெறுதல்.
- ஒரு வலைதளம் மூலமாக காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்களை அனைவரும் எளிமையாக பெறுதல்.
- சமீபத்திய காலநிலை மாற்றம் குறித்த தகவல்களை வழங்கும் பொருட்டு பன்னாட்டுக் காலநிலைத் தரவுகளை உடனுக்குடன் சேகரித்தல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்து நிறுவனங்களையும், ஆய்வு நிலையங்களையும் ஒருங்கிணைத்து, தொழில்நுட்பம் மற்றும் தரவுகளை பரிமாறிக் கொள்வதுடன், அவற்றுடன் ஒருங்கிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

- காலநிலை குறித்த ஆய்வுகளில் தொடர்புடைய அனைத்து பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான அறிவியல் மையங்களிலிருந்து தகவல்களைப் பெற்று ஒருங்கிணைத்தல்.

**7.5. நீலக்கொடி கடற்கரை சான்றளிப்புத் திட்டம் (Blue Flag Beach Certification Programme)**

நிலையான சுற்றுலா மற்றும் ஆரோக்கியமான கடலோர நிருவாகத்தை திட்டமிடவும், மேம்படுத்தவும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டுள்ள கடற்கரை சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை அமைப்பு [Beach Environment and Aesthetic Management System (BEAMS)] எனும் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை திட்டம், கடற்கரைகளில் இருக்கும் மாசுக்களைக் குறைக்கவும் மற்றும் சர்வதேச தர அளவீட்டிற்கு இந்தியாவின் கடற்கரைகளை உயர்த்தவும் தேவையான அம்சங்களுடன் செயல்படுத்தப்படுகிறது.

கடற்கரைகள் மற்றும் படகுத்துறைகளுக்கு அளிக்கப்படும் நீலக்கொடி சான்றிதழானது, சர்வதேச, அரசு சாரா, இலாப நோக்கமற்ற சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தால் (Foundation for Environmental Education) அளிக்கப்படுகிறது. மேலும், தரம், சுற்றுச்சூழல் கல்வி மற்றும் தகவல்கள், பாதுகாப்பு மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் பொது சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகிய 4 தலைப்புகளின் கீழ் உள்ள நீலச் சான்றிதழுக்கான 33 தகுதிகளை கொண்டுள்ள கடற்கரைகளுக்கே இச்சான்றிதழ் வழங்கப்படும். நீலக்கொடியானது, உள்ளூர், மண்டல மற்றும் தேசிய அளவில் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை ஒன்றிணைக்கும் வகையில் மிகவும் மதிப்புமிக்க, சிறப்பு வாய்ந்த மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் அடையாளமாக மாறியுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள, கோவளம் கடற்கரையானது, நீலக்கொடித் திட்டத்தின் கீழ், நீரின் தரம் மற்றும் பாதுகாப்பு அளவுகளை நிறைவு செய்யும்

வகையில், தமிழ்நாட்டில் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டு, ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின், ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைச் சங்கம் (Society of Integrated Coastal Management (SICOM)) மூலமாக செயல்படுத்த ஒரு மாதிரி கடற்கரையாக தேர்வு செய்யப்பட்டது. கோவளம் கடற்கரையில் நீலக்கொடி கடற்கரைத் திட்டத்தைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கடற்கரை மேலாண்மைக் குழு (Beach Management Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்த கோவளம் கடற்கரைக்கு அக்டோபர் 2021 முதல் மே 2022 வரை 21.09.2021 அன்று நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டு 2022 – 2023 ஆண்டு வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை 2021–22 உரையில், அடுத்த 5 ஆண்டுகளில் 10 கடற்கரைகளுக்கான மதிப்புமிக்க நீலக்கொடி

சான்றிதழைப் பெறுவதற்கான திட்டத்தை ரூ.100 கோடி செலவில் அரசு அறிவித்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள கீழ்க்காணும் 10 கடற்கரைகளில் நீலக்கொடி சான்றிதழ் திட்டமானது செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தை செயல்படுத்த கடற்கரைகள் குறித்த அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுக்கு பிறகு திட்டம் செயல்படுத்தப்படும்

1. மெரினா கடற்கரை – சென்னை மாவட்டம்
2. மணமேல்குடி கடற்கரை – புதுக்கோட்டை மாவட்டம்
3. குஷி கடற்கரை – இராமநாதபுரம் மாவட்டம்
4. வெள்ளி கடற்கரை – கடலூர் மாவட்டம்
5. கோட்டைப்பட்டினம் கடற்கரை – புதுக்கோட்டை மாவட்டம்
6. நீலாங்கரை கடற்கரை – செங்கல்பட்டு மாவட்டம்
7. காமேசுவரம் கடற்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்

8. நாரவாக்கம், மரக்காணம் கடற்கரை – விழுப்புரம் மாவட்டம்
9. காயல்பட்டினம் கடற்கரை – தூத்துக்குடி மாவட்டம்
10. நெய்தல் நகர் கடற்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்

### 7.6 துறைக்கென பசுமைக் கட்டடம் கட்டுதல்

சுற்றுச்சூழல் துறை 1995–ம் ஆண்டு துவங்கப்பட்டு வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக துறையின் செயல்பாடு பலமடங்கு அதிகரித்து வருகிறது. "தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்" என்ற திட்டத்தை செயல்படுத்துவதில் சுற்றுச்சூழல் துறை ஒரு செயலாக்கத் துறையாக செயல்பட்டு வருகிறது.

அதிக மற்றும் விரிவான பொறுப்புகளை இத்துறை கொண்டுள்ளதன் காரணமாக, சுற்றுச்சூழல் துறையின் கீழ் செயல்படும் பல்வேறு பிரிவுகளின் தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக துறைக்கென தனியாக ஒரு கட்டடம் தேவை ஆகும். எனவே, நவீன

தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரு பசுமைக் கட்டடத்தை 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உகந்த இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் பசுமை கட்டிடம் உடனடியாக கட்டப்படும்.

8. நிறைவுரை

பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை சமமாக நோக்கி, இவை இரண்டின் வளர்ச்சிக்கும் இடையூறு ஏற்படாமல் நிலைத்த வளர்ச்சியை அடைவது ஒரு அரிய கலையாகும். காலநிலை மாற்றத்தின் எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கு அதிக கவனமளிப்பது அவசியமான ஒன்றாகும். சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் ஆகிய இரண்டிற்கும் உகந்த பயன் தரக்கூடிய, புதிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"... என்கிறது

**– தொல்காப்பியம்**

ஐம்பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் முதலானவை கலந்தது தான் உலகம் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

### 1. முன்னுரை

"மாசு கட்டுப்பாடு" இயற்கை வளங்களை பாதுகாத்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் அதே நேரத்தில், தொழில்துறையில் திறமையான உற்பத்தி மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு வீடுகள், வணிகங்கள் மற்றும் சமூகத்தின் கழிவுகளைக் கையாளுவதற்கான தேவையை குறைக்கிறது. இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, நீர் (மாசு தடுப்பு மற்றும்

கட்டுப்பாடு) சட்டம், 1974–இன் (ஒன்றிய சட்டம் 6) பிரிவு 4 (1)–இன் கீழ் 19.02.1982 நாளிட்ட சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் அரசாணை எண் 340–ன் படி, தமிழ்நாடு நீர்மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை நிறுவியது. இது 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு, அதே நாளில் வாரியம் செயல்பாட்டுக்கு வந்தது. பின்னாளில், தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983–ல் இயற்றப்பட்ட பிறகு, மேற்குறிப்பிட்ட வாரியம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்போது தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கீழ் செயல்படுகிறது. வாரியம் ஒன்றிய அரசின் சட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான மாநிலத்தின்

சட்டப்பூர்வமான அமைப்பாகும். நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 பிரிவு 4–இன் படி, தலைவர், உறுப்பினர் செயலர், மாநில அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நபர்கள், விவசாயம், மீன்பிடித்துறை, தொழில் அல்லது வர்த்தகம் போன்றவற்றின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் அல்லாத மூன்று நபர்கள் மற்றும் மாநில அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் அல்லது கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நபர்கள் வாரிய உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

2. **வாரியத்தின் பணிகள்:**

- மாநிலத்தில் நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மற்றும் குறைக்கவும் விரிவான திட்டங்களைத் திட்டமிடுதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது

தொடர்பான எந்தவொரு விஷயத்திலும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.


- அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஆய்வு செய்தல் மற்றும் அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை அகற்றுவதற்கான அமைப்பு மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்பான திட்டங்கள், விவரக்குறிப்புகள் மற்றும் பிறதரவுகளை மதிப்பாய்வு செய்தல்.
- நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான திட்டங்களில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடும் பணியாளர்களுக்குப் பயிற்சியை ஏற்பாடு செய்வதில் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் (Central Pollution Control Board) ஒத்துழைத்து, அது தொடர்பான பெருமளவிலான

விழிப்புணர்வு கல்வித் திட்டத்தை ஏற்பாடு செய்தல்.

- நீர் மாசுபாடு தொடர்பான தடைகள் மற்றும் நீர் மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் மற்றும் அவற்றில் பங்குபெறுதல்.
- வாரியம் அதன் செயல்பாடுகளை திறம்படச் செய்ய ஏதுவாக ஆய்வகங்களை நிறுவுதல் அல்லது அங்கீகரித்தல், ஆறு, ஓடை அல்லது கிணற்று நீரின் மாதிரிகள் அல்லது அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரின் மாதிரிகள் மற்றும் காற்று மாசுபாட்டினை ஆய்வு செய்தல்.
- ஒன்றிய மாசுகட்டுப்பாடு வாரியம் அல்லது மாநில அரசாங்கத்தால் அவ்வப்போது ஒப்புவிக்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

## 3. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், (i) சென்னையில் உள்ள தலைமை அலுவலகம் (ii) எட்டு மண்டல அலுவலகங்கள் (iii) முப்பத்தியெட்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்ட மூன்று அடுக்கு அமைப்பினைக் கொண்டுள்ளது. கூடுதலாக ஐந்து பறக்கும்படை அலுவலகங்கள் மற்றும் மூன்று உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.



மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எட்டு மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் மற்றும் பத்து மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களை நீர் மற்றும் கழிவுநீர் மாதிரிகளை ஆய்வு செய்யவும், தொழிற்சாலைகளின் புகை வெளியேற்றத்தின் மாதிரிகளை ஆய்வு செய்யவும் மற்றும் மாநிலத்தின் நீர் ஆதார கண்காணிப்பு மற்றும் சுற்றுச்சூழல் காற்று தர ஆய்வுக்காகவும் நிறுவியுள்ளது.

வாரியத்தின் தலைமை அலுவலகம், தலைவர் அவர்களின் தலைமையில் சென்னையிலும், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) தலைமையில் எட்டு மண்டல அலுவலகங்களும் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் முப்பத்தியெட்டு மாவட்ட அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஈரோடு, திருப்பூர், சென்னை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர்

தலைமையில் ஐந்து பறக்கும் படைகளும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், 2021–2022 ஆம் ஆண்டில் மணலி, மேட்டூர் மற்றும் இராணிப்பேட்டை போன்ற அதிக மாசடையும் பகுதிகளில் மூன்று உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், ஒரகடம் மற்றும் நாகப்பட்டினத்தில் இரண்டு மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் பிப்ரவரி 2023–ல் புதிதாக உருவாக்கப்பட்டன மற்றும் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம் செங்கல்பட்டு மாவட்டத்தில் மறைமலைநகரில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## 4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள்

### 4.1. இசைவாணை வழங்குதல்


#### 4.1.1. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் வகைப்பாடு

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உத்தரவுகளின் அடிப்படையில், தொழிற்சாலைகள்

சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என மாசு குறியீட்டு மதிப்பின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. மேலும், தொழிற்சாலைகளின் மொத்த நிலையான சொத்துக்களின் (Gross Fixed Assets) அடிப்படையில் தொழிற்சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

<table>
<tr><th rowspan="2">மொத்த நிலையான சொத்துக்களின் அடிப்படையிலான வகை</th><th rowspan="2">மொத்த நிலையான சொத்துக்கள் (ரூபாய் கோடியில்)</th><th colspan="4">மாசுபடுத்தும் தன்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு</th></tr>
<tr><th>சிவப்பு</th><th>ஆரஞ்சு</th><th>பச்சை</th><th>வெள்ளை</th></tr>
<tr><td>பெரிய வகை</td><td>> 10</td><td rowspan="3">அதிக மாசுபாடு</td><td rowspan="3">நடுத்தர மாசுபாடு</td><td rowspan="3">குறைவான மாசுபாடு</td><td rowspan="3">மிகக் குறைவான மாசுபாடு</td></tr>
<tr><td>நடுத்தர வகை</td><td>> 5 – ≤ 10</td></tr>
<tr><td>சிறிய வகை</td><td>≤ 5</td></tr>
</table>

31.03.2023 வரை வாரியத்தின் இசைவாணை முறையின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–




## 4.1.2. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குவதற்கான அளவுகோல்கள்

காற்று மற்றும் நீர் மாசுபாடு தொடர்பாக தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்காக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணை இரண்டு நிலைகளில் வழங்கப்படுகிறது. முதல் கட்டத்தில், 'நிறுவுவதற்கான இசைவாணை' (CTE) பிற அளவுகோல்களோடு, தொழிற்சாலைகளின்

அமைவிடம் குறித்து ஆய்வு செய்த பிறகு வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக 30.03.1989 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண்.213–ன்படி, குறிப்பிட்டுள்ள நீர் நிலைகளிலிருந்து ஒரு கி.மீ தொலைவிற்குள்ளாகவும் மற்றும் 08.05.1998 நாளிட்ட அரசாணை எண்.127–ன்படி தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகளின் கரையில் இருந்து ஐந்து கி.மீ. தொலைவிற்குள்ளாகவும் அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைவதை தடை செய்கிறது. இரண்டாவதாக, நிறுவுவதற்கான இசைவாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தபிறகு, தொழிற்சாலைகளை இயக்க 'இயக்குவதற்கான இசைவாணை' (CTO) வழங்கப்படுகிறது. மேற்கண்ட அரசாணையிலிருந்து ஃபவுண்டரி தொழிற்சாலைக்கு சில நிபந்தனைகளுடன் விலக்கு அளித்துள்ளது.

21.02.2020 நாளிட்ட தமிழ்நாடு அரசின் அரசிதழ் அறிவிப்பின்படி, காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சை,

திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், அரசாணை எண்.797 நாள். 28.12.2020–ன்படி நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டம், கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார் கோவில், மேல்புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி வட்டாரங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி, திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி வட்டாரங்கள், பாதுகாக்கப்பட்ட வேளாண்மண்டலம் (Tamil Nadu Protected Agricultural Zone) என அறிவிக்கப்பட்டது. இப்பகுதியில் துத்தநாக உருக்கி, இரும்புதாமிர உருக்கி, அலுமினியம், எலும்பு கழிவுகள், விலங்குகளின் கொம்பு மற்றும் பிற உடல்பாகங்களை பதப்படுத்துதல், தோல்பதனிடும் தொழிற்சாலை, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, நிலக்கரி படுகை மீத்தேன், ஷேல்கேஸ் போன்ற ஹைட்ரோகார்பன்கள் ஆய்வு மற்றும் எடுத்தல், கப்பல்களை உடைக்கும் தொழிற்சாலைகள் மற்றும்

பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலைகள் போன்றவற்றை தடைசெய்கிறது.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தைத் தவிர மற்ற பகுதிகளில் ஹைட்ரோ கார்பன் ஆய்வு மற்றும் சுரங்கப்பணிகளினால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ள நியமிக்கப்பட்ட உயர்மட்ட நிபுணர் தொழில்நுட்பக் குழுவை அரசு மீண்டும் திருத்தி 09.08.2021 நாளிட்ட தொழிற்துறை (MMA.1) அரசாணை எண்.195–ல் வெளியிட்டுள்ளது.

### 4.1.3. இணையவழி மூலம் இசைவாணை வழங்குதல்

தமிழ்நாடு அரசின் மின்–ஆளுமை முன்முயற்சியின் ஒரு பகுதியாகவும், வாரியம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே ஆரோக்கியமான மற்றும் செயல்திறன் மிக்க தொடர்பினை வழங்கும் நோக்கில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (Online Consent Management and Monitoring System – OCMMS) என்ற இணைய செயலியை

அறிமுகப்படுத்தியுள்ளது. 19.01.2015 முதல் இந்த அமைப்பு இசைவாணை வழங்குவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் விரைவுத்தன்மையைக் கொண்டு வந்துள்ளது. தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு இசைவாணை / இயக்க இசைவாணை / இசைவாணை புதுப்பித்தல், ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பித்தல், ஆவணங்களைச் சமர்ப்பித்தல், இசைவாணை கட்டணங்களை இணையவழியில் செலுத்துதல், விண்ணப்பங்களின் நிலையை அறிதல் மற்றும் இணையவழி மூலம் விளக்கங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்கு இந்த செயலி உதவுகிறது. இச்செயலி மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதில் தொழிற்சாலைகளுக்கு உதவ, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் 'உதவி மையத்தை' அமைத்துள்ளது.

சட்டங்கள் மற்றும் விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் திறமையான கண்காணிப்பிற்காக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தலைமை அலுவலகம், மண்டல அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக அளவில் பல்வேறு குழுக்களை முறையே இசைவாணை அனுமதி குழு, மண்டல அளவிலான இசைவாணை அனுமதி குழு மற்றும் மாவட்ட அளவிலான இசைவாணை அனுமதி குழு அமைத்துள்ளது. இந்தக் குழுக்கள் சீரான இடைவெளியில் கூட்டங்களை நடத்தி இசைவாணை வழங்குதல் போன்றவற்றை முடிவு செய்கின்றன.

நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணை தவிர, தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள், மருத்துவக்கழிவுகள், திடக்கழிவுகள், மின்–கழிவுகள், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மின்கலன் கழிவுகளைக் கையாள்வதற்கான அங்கீகாரம் தொழிற்சாலைகளுக்கு

இணையவழியில் வழங்கப்படுகின்றன. இது தொடர்பான தரவுகள் வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்படுகிறது.


- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் கீழ்வரும் திட்டங்கள் மற்றும் அதன் கீழ் வராத திட்டங்களுக்கு முறையே ஏழு ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகள் செல்லுபடியாகும் விதத்தில் நிறுவுவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது.
- சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு முறையே 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் மற்றும் 14 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் விதத்தில் தகுதியுள்ள தொழிற்சாலைகளுக்கு இயக்குவதற்கான இசைவாணை தொகுப்பாக வழங்கப்படுகிறது.
- 13.01.2020 முதல் நகர மற்றும் ஊரமைப்பு இயக்குனரகம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் / உள்ளூர் திட்டக்குழுமம் மூலம்

அமைக்கப்பட்டுள்ள தொழில்துறை பயன்பாட்டு மண்டலம் / தொழிற்பேட்டையில், உத்தேசிக்கப்பட்ட பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான இசைவாணையின்றி இயக்குவதற்கான இசைவாணையை வாரியம் நேரடியாக வழங்குகிறது.

- மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் அறிவித்தபடி, தொழிற்சாலைகளுக்கு எளிதாக தொழில் செய்ய ஏதுவாக இயக்குவதற்கான இசைவாணை / இசைவாணை புதுப்பித்தல் போன்றவற்றை ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதற்கு பதிலாக 08.10.2021 நாளிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (சு.சூ.1) துறையின் அரசாணை எண். 144–இன்படி ஒரு தொகுப்பாக வழங்கப்படுகிறது.

### 4.1.3. தானியங்கு இசைவாணை புதுப்பித்தல்

அனைத்து சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழில்களுக்கான 'தானியங்கு புதுப்பித்தல்' (Auto Renewal) என்ற முறையை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, தொழிற்சாலைகள் சுயசான்றிதழை சமர்ப்பித்தவுடன் ஆய்வு இல்லாமல் தொழிற்சாலைகளுக்கு இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு மூலம் விண்ணப்பத்தைப் பெற்ற ஏழு நாட்களுக்குள் இசைவாணை புதுப்பிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 'தானியங்கு புதுப்பித்தல்' மூலம் நிறுவுவதற்கான இசைவாணையிலும் கால அளவினை நீட்டித்து வழங்குகிறது.




**01.04.2022 முதல் 31.03.2023 வரை இயக்குவது மற்றும் புதுப்பித்தலுக்காக வழங்கப்பட்ட இசைவாணைகள்**

## 5. சுற்றுப்புற நீர், காற்று மற்றும் ஒலிதர கண்காணிப்பு

சுற்றுச்சூழல் மாசினை கண்காணிப்பதற்கும் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கொள்கைகளை உருவாக்குவதற்கும், மாற்றுவதற்கும், மாசினை ஏற்படுத்தும் காரணங்களைக் கண்டறியவும் சுற்றுச்சூழல் காரணிகளின் தர கண்காணிப்பு மற்றும் புள்ளி விபரம் சேகரித்தல் மிகவும் அவசியமானதாகும். நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ், வரையறுக்கப்பட்ட

செயல்பாட்டின் அடிப்படையில் வாரியம், மாநிலத்தின் நீர் ஆதாரங்கள், சுற்றுச்சூழல் காற்று மற்றும் ஒலி தரத்தினை பல்வேறு திட்டங்களின் வாயிலாக தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

**5.1. காற்றுத் தர கண்காணிப்பு மற்றும் நீர் தர கண்காணிப்பு மையம்**

சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் இந்த மையம் இயங்குகிறது. இம்மையத்தின் முக்கிய நோக்கம், தொழிற்சாலைகளின் புகை போக்கியிலிருந்து வெளியேறும் மாசினையும் மற்றும் சுற்றுப்புறக் காற்றின் தரத்தினையும் 24x7 கால அளவில் தொடர்ந்து கண்காணிப்பதாகும். அதிக மாசினை ஏற்படுத்தும் தொழிற்சாலைகளான சிமெண்ட் தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலைகள், அனல் மின் நிலையங்கள், உரத் தொழிற்சாலைகள், இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள், இவை அனைத்தும் இம்மையத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இந்த

தொழிற்சாலைகளில் மாசு, நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இருப்பின் அந்த தொழிற்சாலைகளுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்பப்படும். அந்த பகுதியில் உள்ள இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோருக்கும் உடனுக்குடன் தகவல் தெரிவிக்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தற்போது 820 தொழிற்சாலைகளின் புகை போக்கியில் வெளியேறும் காற்றின் தரத்தையும், 154 தொழிற்சாலைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் காற்றின் தரத்தையும் கண்காணிக்க தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மேலும், நீர் தர கண்காணிப்பு மையம் ஒன்றை நிறுவியுள்ளது. நிலத்தடி நீரினை மாசு படுத்தும் தோல் பதனிடும்

தொழிற்சாலை, எரிசாராய தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், பூச்சி கொல்லி மருந்து நிறுவனங்கள், ஆடை உற்பத்தி நிறுவனங்கள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவை இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரம் நிகழ் நேர அடிப்படையில் இம்மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. தற்போது 360 தொழிற்சாலைகள், இம்மையத்துடன் இணைக்கப்பட்டு, இதன் தரவுகள் வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

## 5.2. நீர் மாசு கண்காணிப்பு முறைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அன்றாடக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவைகளின் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது. மேலும், அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற் கழிவுநீர் நிலம், நீர்நிலைகள் மற்றும்

கடலில் வெளியேற்றப்படும் முன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவிற்கு சுத்திகரிக்கப்படுவதையும் கண்காணிக்கிறது.

### 5.2.1. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (Common Effluent Treatment Plant – CETP)

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளின் பங்களிப்பையும், முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டும், வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவீடுகளை அடைவதற்கு அவைகள் படும் சிரமத்தை அறிந்தும், தொழில் முன்னேற்றம், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் அமைப்பதற்கான ஒரு உன்னதமான திட்டத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் பொதுவான வசதிகளை தொழிற்சாலைகளிடம் ஏற்படுத்தி கழிவுநீரை சுத்திகரிக்க உதவும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில், சிறு முதலீட்டு தொழிற்சாலைகள் குழுவாக அமைந்துள்ள இடங்களில் பொதுகழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை

ஏற்படுத்துவதற்கு ஆதாரமாக செயல்படுகிறது. இது தவிர, வாரியமானது அதற்கு தேவைப்படும் உத்தேச தொழில்நுட்பத்தையும் வழங்குகிறது.

தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் (CETPs) விபரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | தொழிற்சாலை வகை | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 13 |
| 2 | துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 19 |
| 3 | மின் முலாம் பூசும் தொழிற்சாலைகள் | 2 |
| 4 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 |
| 5 | மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை | 1 |
| | மொத்தம் | 36 |

மேற்கண்ட, 19 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மட்டுமின்றி, ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உத்தேசிக்கப்பட்ட 10 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நிறுவுவதற்கான இசைவாணையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது. ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த செய்முறை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மற்றும் ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தின் "நடந்தாய் வாழி காவேரி" திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரியுள்ளது.

01.01.2016 அன்று சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையின் படி தோல் தொழிற்சாலைகளின் 10 பொது கழிவு சுத்திகரிப்பு நிலையங்களில் உள்நுழையும் கழிவுநீருக்கான தர அளவுகள் ஒன்றிய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் உருவாக்கப்பட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 5.2.2. உள்ளாட்சி அமைப்புகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய நிலை

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (Chennai Metropolitan Water Supply and Sewerage Board (CMWSSB)), நகர பஞ்சாயத்து ஆணையரகம் (Commissionerate of Town Panchayat (CTP)) மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (Directorate of Municipal Administration (DMA)) ஆகியவற்றிலிருந்து பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாதாந்திர அறிக்கையை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பித்து வருகிறது. இதன் அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள 72.14 மில்லியன் மக்கள் தொகை மூலமாக மொத்தம் நாளொன்றுக்கு 3938.28 மில்லியன் லிட்டர் கழிவுநீர் உற்பத்தியாகிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நிறுவப்படும் அனைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் (Sewage Treatment Plant) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சிவப்பு வகையாக

வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் தற்போது நாளொன்றுக்கு 2172.47 மில்லியன் லிட்டர் மொத்த சுத்திகரிப்பு திறன் கொண்ட 99 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பாடு மற்றும் சோதனை ஓட்ட நிலையில் உள்ளன. இதில் 76 நிலையங்கள் வாரியத்திடம் இயக்குவதற்கான இசைவாணையை மற்றும் 26 நிலையங்கள் நிறுவுவதற்கான இசைவாணையை பெற்றுள்ளன. அதே நேரத்தில் 466.83 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட 16 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுமான நிலையிலும் மேலும் 38 நிலையங்கள் முன்மொழிவு அல்லது திட்ட அறிக்கை நிலையிலும் உள்ளன.

தமிழ்நாட்டில் 32 மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் (Faecal Sludge Treatement Plants) செயல்பாட்டிலும் 19 மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுமான நிலையிலும் உள்ளன. இதில் 20 நிலையங்கள் இயக்குவதற்கான இசைவாணையையும், 12 நிலையங்கள்

நிறுவுவதற்கான இசைவாணையையும் வாரியத்திடம் பெற்றுள்ளன.

### 5.2.3. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், நீர்நிலைகளில் வெளியேற்றப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB), நகர பஞ்சாயத்து ஆணையரகம் (CTP) மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) ஆகியவற்றிற்கு பாதாள சாக்கடை இல்லாத பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பை நிறைவு செய்யவும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஆறுகளில் அல்லது நீர்நிலைகளில் வெளியேற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும், வாரியத்திடம் தக்க இசைவாணையை பெற்று சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குமாறும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தல்களின்படி தற்போது இயக்கத்தில் இருக்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையங்களை தொடர்ந்து கண்காணிக்க இணையவழி தொடர் கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System) மற்றும் கைப்பேசி செயலி பயன்பாட்டை நிறுவுவதற்கான கூடுதல் வழிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன. வாரியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாரியத்தால் சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படுகிறது.

மேலும், நீர்நிலைகளில் முறைகேடாக கழிவுநீரை கொட்டும் டேங்கர் லாரிகளின் பதிவு எண்களை ரத்து செய்ய போக்குவரத்து துறைக்கு வாரியம் உத்தரவிட்டு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தில் இவ்வாறு முறைகேடாக செயல்பட்ட 21 லாரிகளின் பதிவு எண்களை ரத்து செய்ய வாரியம் பரிந்துரை செய்துள்ளது. மேலும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை நீர்நிலைகளில் வெளியேற்றுவதைக் குறைக்கும் வகையில், கழிவுநீர் டேங்கர் லாரிகளில் டிஜிட்டல் லாக் (Digital Lock)

அமைப்பை நிறுவவும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB), நகர பஞ்சாயத்து ஆணையரகம் (CTP) மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) ஆகியவற்றிற்கு வாரியத்தால் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 5.3. நீர் நிலைகள் கண்காணிப்பு

### 5.3.1. தேசிய நீர் தர கண்காணிப் திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் நான்கு முக்கிய நதிகளான காவிரி, தாமிரபரணி, பாலாறு, வைகை மற்றும் எட்டு பெரிய ஏரிகளான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, பழவேற்காடு மற்றும் செங்குன்றம் ஆகியவற்றின் நீரின் தரத்தினை ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய நிதி உதவியுடன் கண்காணிப்பு செய்து வருகின்றது. 2021–22 ஆம் ஆண்டில் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் 58 நிலையங்களில் இருந்து 72 நிலையங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

மாதந்தோறும் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்படுகின்றன.

மாநிலத்தில், நிலத்தடிநீர் மாசு அடைய வாய்ப்புள்ள முக்கியமான இடங்களில் நிலத்தடி நீரின் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு, வாரியம் 2020 முதல் ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 18 இடங்களில் மாதந்தோறும்/ஆறுமாதங்களுக்கு ஒரு முறையும் நீர் மாதிரிகள் எடுத்து பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மின்னணு நீர் தர தரவு அமைப்பிலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 5.3.2. தேசிய நதிகள் பாதுகாப்பு திட்டம்

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள நதிநீர் மாசுபடுவதை கண்காணிக்க ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் அடையாளம் கண்டுள்ள, 51 நிலையங்களில் நதிநீரின் தரம்

கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையங்களில் காவிரி மற்றும் அதன் துணை ஆறுகள், வைகை, வெண்ணாறு, தாமிரபரணி, பாலாறு, அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் ஓட்டேரி நல்லா ஆகியவற்றில் 35 நிலையங்களும், சென்னை, பவானி, ஈரோடு, பள்ளிப்பாளையம், குமாரபாளையம், மயிலாடுதுறை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களின் அன்றாடக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வெளியேற்றத்தில் 16 நிலையங்களும் உள்ளன. இந்நிலையங்களில் மாதந்தோறும் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வில் அறியப்படும் விபரங்கள் வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 5.3.3. கடலோர நீர் தர கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தின் 14 கடலோர மாவட்டங்களில் 34 இடங்களில் கடற்கரையோரங்களின் கடல்நீரின் தரத்தை

மதிப்பிடுவதற்காக மாதாந்திர மாதிரிகள் சேகரித்து கண்காணித்து வருகிறது. கடல் நீரின் தரமானது SW (Sea Water)–I இலிருந்து SW–V வரை வகைப்படுத்தப்பட்டுள்ளது. SW–I – உப்பளங்கள், ஷெல் மீன்பிடித்தல், கடல்வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம் ; SW–II – குளித்தல், கடல் நீர் விளையாட்டு, மீன்பிடித் தொழில், SW–III– தொழிற்சாலைகளின் குளிரூ , பொழுதுபோக்கு இடங்கள், SW–IV – துறைமுகம் மற்றும் SW–V – கடற்பயணம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கழிவு அகற்றல் போன்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 5.3.4. மாசடைந்த நதிப் பகுதிகள்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் அடிப்படையில் நாடு முழுவதும் 351 நதிப்பகுதிகளை மாசடைந்த பகுதிகள் என அறிவிப்பு செய்துள்ளது. அவற்றில் ஆறு நதிப்பகுதிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அவை காவிரி, பவானி,

சரபங்கா, திருமணிமுத்தாறு, வசிஷ்டா மற்றும் தாமிரபரணி ஆறுகள் ஆகும்.

நதிகள் மாசு அடைவதற்கு, உள்ளாட்சி அமைப்புகள் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் மற்றும் திடக்கழிவுகளை நீர்நிலைகளில் வெளியேற்றுவதே முக்கிய காரணமாக கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி நதிப்பகுதிகளை மீட்க ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையின் முக்கிய அம்சமாக நகர பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை வசதி ஏற்படுத்துதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், கடலோர மாசு மற்றும் தொழிற்சாலைகளினால் மாசடைவதைத் தவிர்த்தல், நீர் நிலைகளை மேம்படுத்த அணைகள் கட்டுதல், சுற்றுச்சூழல் பூங்காக்கள் அமைத்தல் போன்ற திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இத்திட்டங்கள்

சம்பந்தப்பட்ட துறைகளான நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகர பஞ்சாயத்து ஆணையரகம், பொதுப்பணித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்ட அறிக்கைகளின் பணிகள் அனைத்தும் அரசு கூடுதல் தலைமைச் செயலர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அவர்களின் தலைமையில் நிர்வகிக்கப்படும் ஆறுகள் தூய்மைப்படுத்தும் குழுவால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திட்டப்பணிகள் மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாய ஆணையின்படி தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், மற்றும் ஒன்றிய ஜல்சக்தி அமைச்சரவை மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும். இப்பணியில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து உள்ளாட்சிகளும் பணிகளை துரிதப்படுத்தி முடிக்க அறிவுரை கூறப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் தொடர்

முயற்சியால் மேற்கண்ட ஆறு மாசடைந்த நதிகளில் சரபங்கா, காவேரி மற்றும் பவானி நதிகளின் தூய்மைப்படுத்தும் முன்னுரிமை அளவீடுகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் குறைக்கப்பட்டுள்ளன.

## 5.4. சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு

### 5.4.1. தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டம்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய நிதியுதவியின் கீழ், தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில் மொத்தம் 28 இடங்களில் அதாவது சென்னை (8), கோயம்புத்தூர் (3), மதுரை (3), சேலம் (1), திருச்சி (5), தூத்துக்குடி (3), மேட்டூர் (2) மற்றும் கடலூர் (3) ஆகிய நகரங்களில் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி, வாரத்திற்கு இரண்டு மாதிரிகள் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 104 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நுண்துகள்கள் ($PM_{10}$மற்றும் $PM_{2.5}$), சல்பர் டை ஆக்ஸைடு ($SO_2$) மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடு ($NO_2$) ஆகிய காரணிகள்

கண்காணிக்கப்படுகிறது. இக்காரணிகளைக் கொண்டு காற்று தர குறியீட்டு எண் (Air Quality Index) கணக்கிடப்பட்டு, அவை வாரிய இணையதளத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற பகுதிகளுக்கு விரிவுப்படுத்தும் வகையில், வாரியம் மேலும் கூடுதலாக 24 நிலையங்களை எட்டு மாவட்டங்களில் தலா மூன்று நிலையங்கள் என தருமபுரி, கன்னியாகுமரி, பெரம்பலூர், சிவகங்கை, திருவாரூர், தேனி, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் அமைத்து 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் செயல்படுத்தி வருகிறது. தற்சமயம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் மொத்தம் 52 நிலையங்களை தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் மூலம் நிறுவியுள்ளது.

**5.4.2. தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்:**

சுற்றுப்புற காற்றின் தரத்தினை, தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் மொத்தம் 34 இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று தரகண்காணிப்பு நிலையங்களை (Continuous Ambient Air Quality Monitoring System (CAAQMS)) அமைத்துள்ளது.

மேலும் 25 இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. விவரங்கள் பின்வருமாறு :–

| மாவட்டம் | தற்போது இருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை | முன்மொழியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அரியலூர் | 1 | – |
| செங்கல்பட்டு | 1 | 3 (பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு) |

| மாவட்டம் | தற்போது இருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை | முன்மொழியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சென்னை | 4 | – |
| கோயம்புத்தூர் | 2 | – |
| கடலூர் | 2 | 1 |
| திண்டுக்கல் | 1 | – |
| தருமபுரி | – | 1 |
| ஈரோடு | 1 | 1 |
| கள்ளக்குறிச்சி | – | 1 |
| காஞ்சிபுரம் | 1 | 1 |
| கன்னியாகுமரி | – | 1 |
| கரூர் | 1 | – |
| கிருஷ்ணகிரி | 1 | 1 |
| மயிலாடுதுறை | – | 1 |
| மதுரை | 1 | – |
| நாகப்பட்டினம் | 1 | – |

| மாவட்டம் | தற்போது இருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை | முன்மொழியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாமக்கல் | 1 | – |
| பெரம்பலூர் | – | 1 |
| புதுக்கோட்டை | 1 | – |
| ராமநாதபுரம் | 1 | – |
| ராணிப்பேட்டை | 1 | – |
| சேலம் | 1 | – |
| சிவகங்கை | – | 2 (சிவகங்கை, காரைக்குடி) |
| தென்காசி | – | 1 |
| தேனி | – | 1 |
| தஞ்சாவூர் | 1 | 1 |
| திருவள்ளூர் | 3 | 2 (திருவள்ளூர், ஆவடி) |
| தூத்துக்குடி | 1 | – |

| மாவட்டம் | தற்போது இருக்கும் நிலையங்களின் எண்ணிக்கை | முன்மொழியப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | 2 | – |
| திருநெல்வேலி | 1 | – |
| திருப்பூர் | 1 | – |
| திருவாரூர் | – | 1 |
| திருவண்ணாமலை | – | 1 |
| திருப்பத்தூர் | – | 2 (திருப்பத்தூர், ஆம்பூர்) |
| நீலகிரி | 1 | – |
| வேலூர் | 1 | – |
| விழுப்புரம் | – | 1 |
| விருதுநகர் | 1 | 1 |
| மொத்தம் | 34 | 25 |

இந்நிலையங்களின் மூலம் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண் துகள்கள், சல்பர்–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன் மோனாக்சைடு, பென்சீன், டொலுவின் மற்றும் சைலீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

நிகழ்கால சுற்றுப்புற காற்றுதர விபரங்கள் மற்றும் காற்று தர குறியீடு (AQI) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. மேலும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய மின்னணு காற்று தர தரவு அமைப்பிலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 5.4.3. காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள்

தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில், காற்றில் நுண் துகள்களின் ($PM_{10}$) அளவினைக் கொண்டு நாடு முழுவதும் மொத்தம் 131 நகரங்கள்,

காற்று தர வருடாந்தர குறியீட்டினை ($60\mu g/m^3$) எட்டாத நகரங்கள் என ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வகைப்படுத்தியுள்ளது. நுண்துகள்கள், தர அளவுகளை விட அதிகமாக இருப்பதற்கு வாகன போக்குவரத்து, சாலைகளில் புழுதி மேலெழும்புதல், திடக் கழிவுகளை எரித்தல், கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல், குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களில் பயன்படுத்தப்படும் எரி பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் காற்று மாசு ஆகியவை காரணங்கள் ஆகும். தமிழ்நாட்டில் தூத்துக்குடி, திருச்சி, மதுரை மற்றும் சென்னை நகரங்கள் காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள் வரிசையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேற்படி நகரங்களில் காற்று தரத்தினை மேம்படுத்தும் வகையில் மேற்கண்ட நகரங்களுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசு 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தேசிய தூய்மையான காற்று திட்டத்தின் (National Clean Air Program) கீழ், ரூ 482.89 கோடியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்கண்டவாறு நிதியளித்துள்ளது.

| வ. எண் | காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள் | வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2019 –20 | 2020 –21 | 2021–22 | 2022 –23 | மொத்தம் |
| 1 | தூத்துக்குடி | 0.06 | 3 | – | 4.13 | 7.19 |
| 2 | திருச்சி | – | 21 | 18.35 | 11 | 39.35 |
| 3 | மதுரை | – | 31 | 22.35 | 16 | 69.35 |
| 4 | சென்னை | – | 181 | 91 | 95 | 367.00 |
| தமிழ்நாடு | | | | | மொத்தம் | 482.89 |

இந்நிதியானது, மூலப் பகிர்வு ஆய்வுகள்(Source Apportionment Studies), அதிகாரிகளின் பயிற்சி மற்றும் மேம்பாடு, காடு வளர்ப்பு – மியாவாக்கி காடுகள்,

சாலைகளின் ஓரத்தில் நடைபாதை அமைத்தல், மின்கலன் மூலம் இயக்கப்படும் வாகனங்களை ஊக்குவித்தல், இயந்திர தெரு துடைப்பான்கள் (Mechnical Street Sweepers), தூசியை குறைப்பதற்கான தண்ணீர் தெளிப்பான்கள் வாங்குதல் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படுகிறது.



சாலைகளை துப்புரவு செய்யும் வாகனம்

## 5.5. சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு திட்டம்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னையில் எழும்பூர், தியாகராயநகர், பெரம்பூர், கிண்டி,

திருவல்லிக்கேணி, பள்ளிக்கரணை, வேளச்சேரி, வண்ணாரப்பேட்டை, அண்ணாநகர் மற்றும் சவுகார்பேட்டை ஆகிய 10 இடங்களில், சுற்றுப்புற ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகளை பொருத்தி, ஒலி அளவினை பதிவு செய்து வருகின்றது. இத்தகவல்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

## 6. கழிவு மேலாண்மை கண்காணிப்பு

### 6.1. மருத்துவக் கழிவு மேலாண்மை

மனிதர்கள் மற்றும் விலங்குகளின் நோய் அறிவதற்கான பரிசோதனையின் போது வெளிப்படும் கழிவுகள், சிகிச்சை மற்றும் தடுப்பூசி அதன் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கையின் போது வெளியேறும் கழிவுகள், உயிரியல் பரிசோதனையில் வெளியேற்றப்படும் கழிவுகள் ஆகியவை மருத்துவக் கழிவுகள் ஆகும். மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் படி மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து

அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் அனுமதிக்கப்பட்ட பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர் ஆகியோர்களின் பொறுப்பாகும். மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இணைய வழி மூலம் வாரியம் அங்கீகாரம் வழங்குகிறது, மேலும், வாரியம் இவ்விதிகளின்படி பல்வேறு சாராம்சங்கள் கடைப்பிடிக்கப்படுவதை கண்காணிக்கிறது. இவ்விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க, அரசு, மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்றையும் அமைத்துள்ளது.


தமிழ்நாட்டில், இது வரை 28,435 படுக்கை மற்றும் படுக்கையில்லா தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கும், கால்நடை நிறுவனங்கள், நோய்குறி ஆய்வகங்கள் (Pathological Labs), இரத்த சேமிப்பு வங்கிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வாரியம், மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள்,

2016–ன் படி அங்கீகாரம் வழங்கியுள்ளது. அங்கீகாரமானது இசைவாணை முடிவடையும் காலம் வரை வழங்கப்படுகிறது.

### 6.1.1. பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு வசதிகள்

பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் மருத்துவக் கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு மற்றும் அறிவியல் பூர்வமாக அகற்றுவதற்காக செயல்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் மருத்துவக் கழிவுகளின் தினசரி சராசரி உற்பத்தி 45.2 டன்களாக இருந்தது. தமிழ்நாட்டில் 10 பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. 10 பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் நாள் ஒன்றிற்கான மொத்த நிறுவப்பட்ட திறன் 90.35 டன்களாகும் (நாள் ஒன்றிற்கான திறன் எரிப்பான் 56.5 டன், கிருமிகள் அழிப்பான் 33.85 டன்). தமிழ்நாட்டில் அமைந்துள்ள பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் விவரங்கள் பின்வருமாறு:

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள்




| வ. எண். | பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள மாவட்டங்கள் |
|---|---|
| 1. | செங்கல்பட்டு மாவட்டம் – (2) |
| 2. | |
| 3. | தஞ்சாவூர் மாவட்டம். |
| 4. | வேலூர் மாவட்டம். |
| 5. | சேலம் மாவட்டம். |
| 6. | கோயம்புத்தூர் மாவட்டம். |
| 7. | திருநெல்வேலி மாவட்டம். |
| 8. | விருதுநகர் மாவட்டம். |
| 9. | கோயம்புத்தூர் மாவட்டம். |
| 10. | கடலூர் மாவட்டம். |

| நிறுவப்பட உள்ளவை | |
|---|---|
| 11. | திருப்பூர் மாவட்டம் |
| 12. | திருவள்ளூர் மாவட்டடம் |
| 13. | கிருஷ்ணகிரி மாவட்டம் |

### 6.1.2. கோவிட்–19 மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவமனைகள், தனிமைப்படுத்தப்பட்ட முகாம்கள், வீடுகள் / வீட்டு பராமரிப்பு வசதிகள், ஆய்வகங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் உருவாகும் கோவிட்–19 பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மருத்துவக் கழிவுகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நெறிமுறைகளின்படி, இயக்கத்திலுள்ள 10 பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிறுவனங்களால்

முறையாக சேகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன.


ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனைத்து பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களையும், கூடுதலாக உருவாகும் கோவிட்–19 மருத்துவ கழிவுகளை கையாள்வதற்காக அதிக நேரம் செயல்பட அறிவுறுத்தியுள்ளது.

மேலும், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின் படி, கோவிட்–19 மருத்துவ கழிவுகளை எரிப்பதற்கு கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை அமைப்பிலுள்ள எரிப்பானை பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

தினந்தோறும் சேகரித்து அகற்றப்படும் கோவிட்–19 மருத்துவக் கழிவுகளின் விவரங்கள் வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம்

செய்யப்படுகிறது. ஜனவரி 2022 முதல் பிப்ரவரி 2023 வரை சராசரியாக தினசரி கோவிட்–19 மருத்துவ கழிவுகளின் அளவு 1.65 டன்களாகும்.

**<u>மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் பகுதி–I</u>**




## 6.2. மின்கலக்கழிவு மேலாண்மை

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது (Ministry of Environment and Forest,

Climate Change (MoEF & CC)) சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986–ன் கீழ் மின்கலன் (மேலாண்மை & கையாளுதல்) விதிகள், 2001–ஐ தளர்த்தி மின்கலன் கழிவு (மேலாண்மை) விதிகள், 2022–ஐ 22.08.2022 அன்று அறிவிப்பு செய்தது.

இந்த விதிகள்

i. மின்கலன் உற்பத்தியாளர், முகவர், நுகர்வோர், சேகரிப்பு, பிரித்தல், போக்குவரத்து, மறுசீரமைப்பு மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கும்,
ii. வேதியியல், வடிவம், அளவு, எடை, பொருள் கலவை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து வகையான மின்கலன்களுக்கும் பொருந்தும்.



**மின்கலக் கழிவுகள்**

விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (Extended Producer Responsibility (EPR)) என்ற கருத்தின் அடிப்படையில் இவ்விதியானது செயல்படுகிறது. மின்கலன் உற்பத்தியாளர்கள், கழிவு மின்கலன்களை சேகரித்து மறுசுழற்சி செய்தல் / புதுப்பித்தல் மற்றும் கழிவுகளில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பொருட்களை புதிய மின்கலன்களாக பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு பொறுப்பானவர்கள்.

இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு இலக்குகள்,

பொறுப்புகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றாததற்காக சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படும்.

## 6.3. திடக்கழிவு மேலாண்மை

வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளால் உருவாகின்ற மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகள் நகர திடக்கழிவுகளாகும். திடக்கழிவு மேலாண்மை விதிகள், திடக்கழிவுகளை சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ள பொறுப்பினை வரையறுத்துள்ளது. தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நாளொன்றிற்கு 5 டன்களுக்கு மேல் திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் மொத்தம் 219 உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி கழிவுகள் நீர்நிலைகளில் கொட்டப்படுவதை தடுக்கும் பொருட்டு, தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை, கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை, முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, ஆகியோர் திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 செயல்படுத்தப்படுவதை தனிப்பட்ட விதத்தில் மதிப்பாய்வு செய்து, அதனை மாநிலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு, மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம், வழக்கு எண். 95/2021 மற்றும் 30/2020 இல் தனது 31.3.2022 தேதியிட்ட ஆணையில் உத்தரவிட்டுள்ளது.

திடக்கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுவதை தடுக்கவும், இதன் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் சென்னை, வேலூர் மற்றும் சேலம்

ஆகிய மாவட்டங்களில் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 6.3.1. குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் (Bio Mining)

திடக்கழிவுகள் மேலாண்மை விதிகளின்படி, உள்ளாட்சி அமைப்புகள் பழைய குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலங்களை மீட்டெடுக்க வேண்டும் என்று விதிகள் கூறுகின்றன. இதன்படி, உள்ளாட்சி அமைப்புகளால் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட 269 நெடுங்கால குப்பைக் கிடங்குகளில், 180 இடங்களில் குப்பைக்கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 69 இடங்களில் பணிகள் நிறைவடைந்துள்ளன மற்றும் மீதம் உள்ள 111 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 360 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

## 6.4. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

அதிகரிக்கும் நகரமயமாக்கல், மக்கள் தொகை பெருக்கம், பொருளாதார நிலைகள் மற்றும் தொழில்துறை வளர்ச்சி ஆகியவை பிளாஸ்டிக் கழிவுகளின் உற்பத்தி அதிகரிக்க காரணமாகின்றன.

2021-22 ஆம் ஆண்டறிக்கையின்படி தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளிலிருந்து நாளொன்றிற்கு மொத்தம் 1088.734 டன் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 95% (1028.25 டன்/நாள்) கழிவுகள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி மற்றும் பிற நோக்கங்களுக்காக அனுப்பப்படுகிறது. சேகரிக்கப்பட்ட கழிவுகள் பின்னர் வளங்கள் மீட்பு மையங்களுக்கு அனுப்பப்படுகின்றன, அங்கு அவை தரம் பிரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யக் கூடிய கழிவுகள் பதிவு செய்யப்பட்ட மறுசுழற்சியாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மறுசுழற்சி செய்ய முடியாத

கழிவுகள் சிமெண்ட் உற்பத்தியாளர்களுக்கு இணை செயலாக்கத்திற்காக அனுப்பப்படுகின்றன.

திருத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 ன் கீழ், தமிழ்நாட்டில் 216 அங்கீகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவு மறுசுழற்சியாளர்கள் உள்ளனர். அவர்களால் சேகரிக்கப்பட்ட மொத்த பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து மறுசுழற்சிக்கு அனுப்பப்படும் பிளாஸ்டிக் கழிவுகளின் மொத்த அளவு சுமார் 1,76,319 டன் ஆகும்.

2021-22 ஆம் ஆண்டில் 8000 டன் மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகள் சாலை கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் 38 மக்கும் பிளாஸ்டிக் உற்பத்தி ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**6.4.1. ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை**

தமிழ்நாடு அரசு, 25.06.2018 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண்.84–ல், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் சில வகை பிளாஸ்டிக் பொருட்கள் மீது தடிமன் வரைமுறையின்றி பயன்படுத்த தடை அறிவித்தது. இத்தடையானது 01.01.2019 முதல் அமலில் உள்ளது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 12.08.2021 தேதியிட்ட அறிவிக்கையின் வாயிலாக ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் சிலவகை பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த தடை அறிவித்தது. இத்தடையானது 01.07.2022 முதல் அமலில் உள்ளது.

**6.4.2. பிளாஸ்டிக் தடை மீதான அமலாக்கம்**

ஜனவரி 2019 முதல் பிப்ரவரி 2023 வரை தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களான நெய்யப்படாத கைப் பைகள், பிளாஸ்டிக் கைப் பைகள், தண்ணீர்

பைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 208 தொழிற்சாலைகளை மூடவும் மற்றும் மின் இணைப்புகளை துண்டிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளால் அடிக்கடி ஆய்வுகள் நடத்தப்பட்டு, ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை பயன்படுத்துபவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படுகிறது. ஜனவரி 2019 முதல் பிப்ரவரி 2023 வரை 11,51,118 சோதனைகள் நடத்தப்பட்டு 2018 டன் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை பறிமுதல் செய்து ரூபாய் 13.62 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 6.4.3. சிறப்பு அமலாக்க நடவடிக்கைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடையை கடுமையாக அமல்படுத்துவதற்கு, 2022ஆம் ஆண்டு அக்டோபர்–டிசம்பர் மாதங்களில், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தல்களின்படி தெருவோர

வியாபாரிகள், பூ மற்றும் பழக்கடைகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் மொத்த விற்பனை சந்தைகள், தொழில்துறை பகுதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான எல்லைகளில் சிறப்பு ஆய்வுகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

ஆய்வின் போது, 17436 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 3970 விதிமீறல்களைக் கண்டறிந்தனர், அவற்றில் 54.432 டன் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.20.91 லட்சம் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது.

### 6.4.4. பிளாஸ்டிக் தடை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்

கீழ்க்கண்ட நடவடிக்கைகள் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

- தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்தல், விநியோகம், கொண்டு செல்லுதல், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத்

தடுப்பதை உறுதிசெய்யும் பொறுப்பில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து மாவட்ட அதிகாரிகளும் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மேற்கொண்டுள்ளனர். பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரமானது, வாகன பிரச்சாரம், பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் விநியோகம் ஆகியவற்றின் மூலமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள் போன்றவற்றில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மருத்துவமனைகள், உணவகங்கள், தொழிற்பேட்டைகள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையம், ரயில் நிலையம், திரையரங்குகள் போன்ற மக்கள் கூடும் பகுதிகளில்

சுவரொட்டிகள் ஒட்டுதல், காட்சிப்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டது.

- ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கின் தீமைகள், ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் மற்றும் அதை அகற்ற மக்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் கோரி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆங்கிலம் மற்றும் தமிழில் செய்தி வெளியிட்டுள்ளது.

### 6.4.5. மாநில அளவிலான சிறப்புப் பணி குழு

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக, 07.02.2022 தேதியிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசாணை எண்.25–ன்படி, அரசு மாநில அளவிலான சிறப்புப் பணிக்குழுவை, தலைமைச் செயலர் தலைமையிலும், மாவட்ட அளவிலான

பணிக்குழுவை மாவட்ட ஆட்சியர் தலைமையிலும் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதிக்கான பணிக்குழுவை ஆணையர் தலைமையிலும் அமைத்துள்ளது. மாநில அளவிலான சிறப்புப் பணிக்குழுவின் கூட்டங்கள் 05.03.2022 மற்றும் 02.03.2023 அன்று நடைபெற்றது. தமிழ்நாட்டில் இத்தடை மாபெரும் வெற்றியை அடைவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள அனைத்து சம்பந்தப்பட்ட துறைகளும் சீரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.5. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

கட்டுமானம் மற்றும் இடிமான (Construction & Demolition) கழிவுகள், மறுசுழற்சி மதிப்பைக் கொண்ட கான்கிரீட், பிளாஸ்டர், உலோகம், மரம், பிளாஸ்டிக் போன்ற மக்காத பொருட்களைக் கொண்டுள்ளன. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், உள்ளாட்சி அமைப்புகள், கட்டுமான மற்றும் இடிமான கழிவுகளின் முறையான மேலாண்மையை

உறுதி செய்ய வேண்டும் என கூறுகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் போன்ற பெரிய மாநகராட்சிகள் இத்தகைய செயலாக்க வசதிகளை அமைக்க முன்வந்துள்ளன. சென்னை பெருநகரப் பகுதியில், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கிடங்கில் நாளொன்றிற்கு தலா 400 டன் திறன் கொண்ட இரண்டு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை பெருநகர மாநகராட்சி, கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளைப் பெறுவதற்காக 15 மண்டலங்களில் சேகரிப்பு மையங்களை நிறுவியுள்ளது.

### 6.6. மின்னணு கழிவு மேலாண்மை

மின் மற்றும் மின்னணு உபகரணங்களின் தயாரிப்பாளர்கள், மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன்படி விரிவாக்கப்பட்ட தயாரிப்பாளர்கள் பொறுப்பின் (Extended Producer Responsibility) கீழ், தங்கள் தயாரிப்புகளின் 'முழு செயல்திறன் இழந்த' கழிவுகளிலிருந்து உருவாகும் மின்னணு கழிவுகளை

சேகரித்து அனுப்புவதற்கு பொறுப்பாவார்கள். ஒன்றிய மாசு கட்டு பாடு வாரியமானது தயாரிப்பாளர்களுக்கு விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு (Extended Producer Responsibility) அங்கீகாரத்தை வழங்குகிறது. மின்னணு கழிவு மேலாண்மை விதிகள்–2016–ஐ கடைப்பிடிக்கப்படுவதை வாரியம் கண்காணிக்கிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது மின்னணு கழிவுகளை கையாளும் உற்பத்தியாளர்கள், அகற்றுபவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் புதுப்பிப்பவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது. அவ்விவரங்கள் அனைத்தும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்தி கவுன்சில் (National Productivity Council of India), சென்னை, தமிழ்நாடு மாநிலத்தில் மின்னணு கழிவுகளை கையாளும் உற்பத்தியாளர்கள், அகற்றுபவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் புதுப்பிப்பவர்களைக் கண்டறியும் பணியை

மேற்கொண்டு, இது குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியலை வாரியத்திடம் சமர்ப்பித்துள்ளது.

தேசிய உற்பத்தி கவுன்சில் நடத்திய ஆய்வில், மொத்த மின்னணு கழிவு உற்பத்தி 2020 ஆம் ஆண்டில் 4,00,482 டன்னாகவும், 2030 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 5,78,356 டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 8831 பங்குதாரர்கள் (உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள், மொத்த நுகர்வோர்கள், புதுப்பிப்பவர்கள், சேகரிப்பு மையங்கள் மற்றும் மறுசுழற்சி செய்பவர்கள்) அடையாளம் காணப்பட்டனர். அனைத்து பங்குதாரர்களையும் (பட்டியலின்படி) கண்டறிவதற்கும், மின்னணு கழிவுகளை அறிவியல் பூர்வமாக அகற்றுவதற்காக அவற்றை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகள், 2022–ஐ 02.11.2022 அன்று அறிவிக்கை செய்துள்ளது. இந்த விதிகள் 01.04.2023 முதல் அமலுக்கு வரும்.



மின்னணு கழிவுகள்

## 6.7. தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை

தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016–ன் கீழ் உள்ள அம்சங்களின் அடிப்படையில், தீங்கு விளைவிக்கும்

கழிவுகள் மேலாண்மை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 4284 தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து, 4266 தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2021-22-ம் ஆண்டில் உற்பத்தியான 8.21 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகளில், 0.95 இலட்சம் டன் (11.57%) கழிவுகள் நிலத்தில் பாதுகாப்பாக கொட்டப்படக்கூடிய கழிவுகளாகவும், 0.189 இலட்சம் டன் (2.3%) கழிவுகள் எரிக்கப்படுபவையாகவும், 1.14 இலட்சம் டன் (13.93%) கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுபவையாகவும் மற்றும் 5.93 இலட்சம் டன் (72.23%) கழிவுகள் பயன்படுத்தக் கூடியவையாகவும் அமைந்துள்ளன. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்புமின்றி விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த

மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது.

### 6.7.1. சிமெண்ட் தொழிற்சாலைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் இணை செயலாக்கம்

தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கம் மூலம் பயன்படுத்தப்படுவது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக உள்ளது. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் இதர கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகளில், இணை செயலாக்கத்திற்கான (Co-processing) மாற்று மூலப்பொருளாகவோ அல்லது எரிசக்தி மீட்புக்கான மாற்று எரிப்பொருளாகவோ குறிப்பிட்ட இணக்க அளவுகோல்களுக்கு உட்பட்டு பயன்படுத்த வாரியம் அனுமதியளித்துள்ளது. தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016-ன்

கீழ் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 18.41 இலட்சம் டன் கழிவுகளை செயலாக்கம் செய்ய, 14 சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் சுமார் 2.18 இலட்சம் டன் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கென பயன்படுத்தப்பட்டுள்ளன.

**6.7.2. தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் முன் செயலாக்க வசதிகள் கொண்ட நிறுவனங்கள்**

சிமெண்ட் தொழிற்சாலைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை இணை செயலாக்கம் மூலம் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, நான்கு தீங்கு விளைவிக்கும் கழிவு முன்–செயலாக்க வசதிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் இணை செயலாக்கத்திற்கு ஏற்றவாறு தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் கலவையை உருவாக்குகிறது. இக்கலவை சிமெண்ட் தொழிற்சாலைகளில் மூலப்பொருளுக்கு அல்லது

எரிபொருளுக்கு மாற்றாக பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 2021-22-ம் ஆண்டில் 0.43 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகளை செயலாக்கி, சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கு அனுப்பியுள்ளன.

**6.7.3. தீங்கு விளைவிக்கும் கழிவுகளால் பாதிக்கப்பட்ட இடங்களின் மறுபுனரமைப்பு**

- ராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் 1995 ஆம் ஆண்டு உற்பத்தியினை நிறுத்தியது. இத்தொழிற்சாலையின் இயக்கத்தின் போது வெளியேற்றப்பட்ட சுமார் 2.2 லட்சம் டன் குரோமியம் கலந்த திடக்கழிவுகள் இத்தொழிற்சாலை வளாகத்தில் சுமார் 2 ஹெக்டேர் நிலப்பரப்பில் கொட்டப்பட்டு இது வரை அகற்றப்படாமல் உள்ளது. இதனால் நிலத்தடி நீர் மாசடைவதை தவிர்க்கும்

பொருட்டு, மேற்படி திடக்கழிவு கொட்டப்பட்டுள்ள பகுதியில் மழைநீர் உட்புகாவண்ணம் பாதுகாப்பாக மூடுவதற்கு ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை ரூ.12 கோடி செலவில் செயல்படுத்துவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

- மேலும், தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் 2020 ஆம் ஆண்டின் OA எண். 186 இல் 02.09.2022 தேதியிட்ட உத்தரவில், ஒரு வருட காலத்திற்குள் மேலும் மாசுபடுவதைத் தடுக்க இடைக்காலத் தீர்வு நடவடிக்கையாக அதை மூடுவதற்கான பணியைத் தொடங்கவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு உத்தரவிட்டுள்ளது. மேலும் ஆறு மாதங்களுக்குள் நிரந்தர தீர்வுக்கான பணியை தொடங்கவும் உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இடைக்கால

தீர்வு நடவடிக்கையை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆவணம் மற்றும் டெண்டர் ஆவணம் தயாரிப்பதற்கான பணியை தி/ள்.ஸ்ட்ராடஸ் சுற்றுச்சூழல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

- கொடைக்கானலில் உள்ள ஹிந்துஸ்தான் யூனிலிவர் தொழிற்சாலை வளாகத்தில் பாதரச கழிவினால் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பினை சீர் செய்யும் பணியினை இந்நிறுவனம் மார்ச் 2021–லிருந்து மேற்கொண்டு வருகின்றது. இப்பணி தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சீர் செய்யப்பட வேண்டிய மொத்த பரப்பளவு 17,858 சதுர மீட்டரில் பிப்ரவரி, 2023 வரை 5176 சதுர மீட்டர் பரப்பளவிற்கு மண் சீர் செய்யப்பட்டுள்ளது. மேலும் 500 சதுர மீட்டர் பரப்பளவு பகுதியினை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

டிசம்பர் 2024 இறுதிக்குள் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- சென்னை தண்டையார்பேட்டை பகுதியில் 2013 ஆம் ஆண்டு தி/ள்.பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தடி பெட்ரோலிய எண்ணெய் குழாயில் கசிவு ஏற்பட்டு நிலத்தடி நீர் மாசடைந்தது. இதனை சீர் செய்யும் பணியினை மேற்படி நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. தற்போது இப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவின்படி இந்த எண்ணெய் கசிவினால் பொதுமக்களுக்கு ஏதேனும் உடல்நலத்தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் சுகாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**6.7.4. தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் பூஜ்ய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகள் மூலம் உருவான கலவை உப்பினை மறு உபயோகம் செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள்**

தமிழ்நாட்டில் வேலூர், இராணிபேட்டை, திருப்பத்தூர், திருச்சி, ஈரோடு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திண்டுக்கல், செங்கல்பட்டு மாவட்டங்களில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள சாயத் தொழிற்சாலைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின், பூஜ்ய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட முறையே சுமார் 100839.4 டன் மற்றும் 162039.8 டன் அடர்கலப்பு உப்பானது தொழிற்சாலை வளாகங்களில் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகும் அடர்கலவை உப்பை சுத்திகரித்து

மீண்டும் தொழிற்சாலைகள் பயன்படுத்துவதற்கான நிலைத்தகு செயல்முறைகள் (Standard Operating Procedures) ஜூன் – 2021 அன்று வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பின்பற்றி, இராமநாதபுரத்தில் ஒரு தனியார் நிறுவனம், சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, சேமிக்கப்பட்ட கலவை உப்பினை சுத்திகரிப்பு செய்வதற்கான அமைப்பை நிறுவி வருகிறது. மேலும், இதற்காக வாரியத்தால் 31.03.2027 வரை செல்லத்தக்க நிறுவுவதற்கான இசைவாணை 13.01.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.

தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கலவை உப்பிலிருந்து சோடியம் குளோரைடு உப்பினை பிரித்தெடுத்து, உரத்தொழிற்சாலைகள் உற்பத்தியில் சோதனை முறையில் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7. சட்ட நடவடிக்கைகள்

சுற்றுச்சூழல் சட்டங்களை மீறும் தொழிற்சாலைகள் மீது, சுற்றுச்சூழல் சட்டங்களின் கீழ் புகார்கள் பதிவு செய்யவும், மேலும் தொழிற்சாலைகளை மூடுவதற்கும் மற்றும் மின் இணைப்பை துண்டிப்பதற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது.

### 7.1. மேல்முறையீட்டு ஆணையம்

மேல் முறையீட்டு ஆணையம் (Appellate Authority), 2000 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும்/தொழிற்சாலையும் மேற்கூறிய ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

### 7.2. தேசிய பசுமைத் தீர்ப்பாயம்

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு 2012 ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்/

மாநில அரசு / மேல்முறையீட்டு ஆணையத்தால் வழங்கப்படும் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும், உத்தரவு பிறப்பித்த 30 நாட்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

**7.3. இணையவழி சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், தேசிய பசுமைத் தீர்ப்பாயம், மேல் முறையீட்டு ஆணையம் ஆகிய நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு செய்வதற்கு இணையவழி அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.

**8. வாரியத்தின் இதர செயல்பாடுகள்**

**8.1. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்**

மாசு கட்டுபாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தின் மூலம் வாரியத்தில் பணிபுரிவோர்,

தொழிற்சாலை பிரதிநிதிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சி நிர்வாகிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு மாசு கட்டுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பயிற்சிகள் அளித்து வருகின்றது. ஏப்ரல், 2022 முதல் பிப்ரவரி, 2023 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் மூலம் 10 பயிற்சிகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும் மற்றும் 11 பயிற்சிகள் இதர நிறுவனங்கள் மூலமாகவும் நடத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் மூலம் 1073 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**8.1.1. வாரிய பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்**

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய சுற்றுச்சூழல் பயிற்சி மையம் மூலம் அரசாங்க அலுவலர்கள், வாரிய பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு சுற்றுச்சூழல் குறித்த புதிய தொழில்நுட்பங்கள், சுற்றுச்சூழல் சட்டங்கள் பற்றிய விளக்கங்கள் மற்றும் சுயமுன்னேற்றம் / நேர மேலாண்மை / மன அழுத்த

மேலாண்மை பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**8.2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நேர்மறையான நடவடிக்கைகள் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வாரியம் ஒவ்வொரு ஆண்டும் பேரணிகள், தானியங்கி மூன்று சக்கர வாகனம் (Auto Rickshaw) மூலம் பரப்புரைகள், சுற்றுச்சூழல் வினாடிவினா, மரக்கன்றுகளை பொது இடங்களில் நடுதல், துண்டு பிரசுரங்கள் விநியோகம், காட்சி பலகைகள், வானொலி பண்பலைகள் மூலம் பரப்புரைகள், விழிப்புணர்வு குறித்த குறும்படங்களை ஊடகங்களில் திரையிடுதல் போன்ற பல வழிகளில் நடத்தி வருகிறது. கூடுதலாக தீபாவளி மற்றும் போகி பண்டிகைகளின் போது சிறப்பு காற்று தர ஆய்வுகளை

நடத்தி காற்றின் தரத்தினை அளவிட்டு அதன் முடிவுகளை வெளியிட்டு வருகிறது.

மேலும், வாரியம் விநாயகர் சதுர்த்தியின் போது சிலைகளை அறிவிக்கப்பட்ட நீர்நிலைகளில் கரைப்பதற்கு முன்னும் பின்னும், நீரின் தரத்தை ஆய்வு செய்து அதன் முடிவுகளை ஒன்றிய மாசு கட்டுபாடு வாரியத்திற்கு அனுப்பி வருகின்றது.

**8.3. இணையவழி குறைகள் மனு நிவர்த்தி அமைப்பு (Online Grievance Petition Redressal System)**

சுற்றுச்சூழல் சம்பந்தமான பொதுமக்களின் புகார் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணும் விதமாக, வாரியம் இணையவழி குறைகள் மனு நிவர்த்தி அமைப்பை உருவாக்கியுள்ளது. ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை, 3696 புகார்கள் பதிவு செய்யப்பட்டு அதில் 2874 புகார்கள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

## 9. வாரியத்தால் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினை நவீன மயமாக்கல்**

- அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் அவை அதிகம் உள்ள பகுதிகளை கண்காணிப்பதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணைகளை கையாளுதல் மற்றும் புகார் / மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேலாண்மைக்காக மணலி, ராணிப்பேட்டை மற்றும் மேட்டூரில் மூன்று புதிய உதவி சுற்றுச் ழல் பொறியாளர் அலுவலகங்கள் நிறுவப்பட்டு டிசம்பர் 2021 முதல் செயல்பட்டு வருகின்றன.
- தொழிற்சாலை கழிவுகள், கழிவுநீர் மற்றும் நகராட்சி திடக்கழிவுகளை வெளியேற்றுவதில் இருந்து நீர்நிலைகளை பாதுகாத்தல் மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த சென்னை, வேலூர்

மற்றும் சேலத்தில் பறக்கும் படை டிசம்பர், 2021 முதல் செயல்பட்டு வருகின்றன.

- கடலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் 17 வகைத் தொழிற்சாலைகள் இருப்பதால், கண்காணிப்பு செயல்திறனை மேம்படுத்தும் வகையில், கடலூரில் புதிய இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம் நிறுவப்பட்டு டிசம்பர் 2021 முதல் செயல்பட்டு வருகின்றது.
- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதனால் உருவாக்கப்பட்ட விதிகளின் சிறந்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை உறுதி செய்வதற்காக, இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம்

தற்போது செங்கல்பட்டில் (மறைமலை நகர்) அமைக்கப்பட்டு வருகிறது.

- வாரியத்தில் பல்வேறு தகவல் தொழில் நுட்ப இணைய வழி பயன்பாடுகளை உருவாக்குவது மற்றும் பராமரிப்பதற்காக தகவல் தொழில் நுட்பப் பிரிவு (Information Technology Wing) உருவாக்கப்பட்டுள்ளது.

**மின்–வாகன பயன்பாடு**

- பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில், 25 மின்–வாகனங்கள் வாங்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உலக சுற்றுச்சூழல் தினத்தில் (05.06.2022) கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**தொகுப்பு இசைவாணை வழங்குதல்**

- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அரசாங்கத்தின் எளிதாக வணிகம் செய்வதற்கான கொள்கையின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் இசைவாணை வழங்குவதற்குப் பதிலாக ஒரு தொகுப்பாக செயல்பாடு மற்றும் புதுப்பிப்பதற்கான இசைவாணையை வழங்குகிறது. 2021–22–ஆம் நிதியாண்டிலிருந்து தேவையான ஒப்புதல் கட்டணத்தைப் பெற்று சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு முறையே 5/ 10 / 14 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு இசைவாணை வழங்கப்படுகிறது. டிசம்பர் 2021 முதல் பிப்ரவரி 2023 வரை மொத்தம் 10428 தொழிற்சாலைகளுக்கு இசைவாணை தொகுப்பாக வழங்கப்பட்டுள்ளது. இது தொழிற்சாலைகள் ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பங்கள் செய்வதிலிருந்து விடுபட

உதவுகிறது. இதனால் பல்வேறு கழிவு மேலாண்மை கண்காணிப்புக்கு இந்த நேரத்தை செலவிட ஏதுவாக உள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன் மற்றும் பலன்கள் குறித்து தொழில்துறையினர் தங்கள் நேர்மறையான கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

**நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் (Real Time Water Quality Management System), தொடர்ச்சியான சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் (Continuous Ambient Air Quality Monitoring System) மற்றும் ஒருங்கிணைந்த சுற்றுசூழல் கண்காணிப்பு காட்சியகம்**

- மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட உரையில் அறிவித்தபடி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் (RTWQMS) மற்றும் தொடர்ச்சியான சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் (CAAQMS)

ஆகியவற்றை நிறுவுவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது.

- அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சுவிஸ் ஃபெடரல் ஏஜென்சியுடன் இணைந்து நிகழ்நேர அடிப்படையில் காற்றின் தரத்தை முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் அமைப்பை நிறுவுதல்.
- இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுசூழல் கண்காணிப்பு காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கண்காணிப்பு மையத்தில் தொழிற்சாலைகளின் புகை மற்றும் கழிவு நீரின் காரணிகள், சுற்றுபுற காற்றின் தரம் மற்றும் நீர் நிலைகளின் தரம், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் மருத்துவ கழிவுகளை எடுத்து செல்லும் வாகனங்கள் முதலியவை கண்காணிக்கப்படும்.

**தொழிற்சாலைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை**

- சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணையின் நிபந்தனைகளை மீறிய மற்றும் சுற்றுச்சூழல் விதிகளுக்கு இணங்காத, சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படுத்திய 366 தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவு பிறப்பித்துள்ளது மற்றும் 4190 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர கடிதம் அனுப்பியுள்ளது.

**நேரடி கலந்தாய்வு அமர்வு**

- வாரியத்தின் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படையானதாகவும், பங்குதாரர்களிடையே புரிதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்காகவும், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிப்பதற்கும் ஏதுவாக வாரியம் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி அன்று 'நேரடி கலந்தாய்வு அமர்வு'

(Open House Session) ஏப்ரல் 2022 முதல் நடத்தப்பட்டு வருகின்றன. ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை 498 புகார்கள் இக்கலந்தாய்வு அமர்வில் பதிவு செய்யப்பட்டு 480 புகார்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

**பசுமை முதன்மையாளர் விருது**

- 2021 முதல் தமிழ்நாடு மாசு கட்டு பாடு வாரியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த அமைப்பு/கல்வி நிறுவனங்கள்/ பள்ளிகள்/ கல்லூரிகள்/ குடியிருப்பு நலச் சங்கங்கள்/ தனிநபர்கள்/ உள்ளாட்சி அமைப்புகள்/ தொழிற்சாலைகளுக்கு பசுமை முதன்மையாளர் விருதை வழங்குகிறது. இவ்விருதுக்காக ஒவ்வொரு ஆண்டும் 100 நபர்கள்/ நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு விருதும் ரூ.1 லட்சம் பரிசுத் தொகையைக் கொண்டுள்ளது. 2021–22 ஆம்

ஆண்டிற்கான பசுமை முதன்மையாளர் விருது வழங்குவதற்காக 32 மாவட்ட ஆட்சியர்களால் 85 பரிந்துரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 2022 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தின் போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பசுமை முதன்மையாளர் விருதுகள் வழங்கப்பட்டது. 2022–23 ஆம் ஆண்டிற்கான பசுமை முதன்மையாளர் விருதுகளுக்கான விண்ணப்பம் தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று விருதுகள் வழங்கப்படும்.

- **மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கிய சாதனைகள் பின்வருமாறு :–**
    - மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பிளாஸ்டிக்கிற்கு மாற்று வழிகளை ஊக்குவிக்கவும், ஒரு முறை

பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 23.12.2021 அன்று சென்னையில் "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். "மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்" என்பது ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான ஒரு மாபெரும் மக்கள் பிரச்சாரம் மற்றும், பாரம்பரியத்திற்கு திரும்புவதற்கும், எதிர்காலத்திற்கான திட்டமிடலுக்குமான அழைப்பாகும்.

○ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம், மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF & CC)

ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன், ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மற்றும் ஸ்டார்ட்அப் மாநாட்டின் தேசிய கண்காட்சியினை சென்னை வர்த்தக மையத்தில் 27.09.2022 & 28.09.2022 ஆகிய தினங்களில் நடத்தியது. பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் உகந்த சூழலை ஊக்குவித்தல் மற்றும் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்களுக்கு பலதரப்பட்ட மாற்றுப் பொருட்கள் கிடைப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது.

இந்தியா முழுவதிலும் இருந்து மொத்தம் 173 கண்காட்சியாளர்கள் இக்கண்காட்சியில் கலந்துகொண்டனர்.

- முதன்முறையாக தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான சுற்றுச்சூழல் மாற்றுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகிப்பவர்களின் தகவல் அடங்கிய தொகுப்பு வெளியிடப்பட்டது. இதில் 659 சுற்றுச்சூழல் மாற்று உற்பத்தியாளர்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. இம்முயற்சி சென்னை உயர் நீதிமன்றத்தின் பாராட்டைப் பெற்றுள்ளது. இத்தொகுப்பு பிற மாசு கட்டுப்பாடு வாரியங்களால் ஒரு குறிப்பு ஆவணமாகப் பயன்படுத்தப்படுகிறது.

- அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் ஒருங்கிணைப்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகள், கடைகள், வணிக நிறுவனங்களில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

- **பிளாஸ்டிக் மாசில்லா உயர்நீதிமன்ற வளாகங்கள்**
  - இந்த பிரச்சாரத்திற்கு ஆதரவாகவும், மஞ்சப்பை பொதுமக்களுக்கு

கிடைக்கவும் தமிழ்நாடு அரசு முதன்முறையாக துணி பை விற்பனை இயந்திரத்தை சந்தைகள், வணிக வளாகங்கள், பொது கட்டிட வளாகங்கள் என அதிக மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களான சென்னை மற்றும் மதுரையில் உள்ள உயர்நீதிமன்ற வளாகம், கோயம்பேடு மார்க்கெட் வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் போன்ற கட்டிட வளாகங்களில் நிறுவியுள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை வளாகங்களை நெகிழி இல்லா வளாகமாக மாற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முறையே ஐந்து மஞ்சப்பை இயந்திரங்களை வழங்கியுள்ளது. மேலும் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தினுள் இரண்டு நெகிழி நொறுக்கும்

இயந்திரங்களையும் (Reverse Vending Machine) மற்றும் மதுரை கிளையில் ஒரு நெகிழி நொறுக்கும் இயந்திரத்தையும் நிறுவியுள்ளது,

- இதுவரை 36 துணிப்பை விற்பனை இயந்திரங்கள் வாங்க திட்டமிடப்பட்டு, 16 இயந்திரங்கள் வெவ்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்கள் இன்றுவரை கிட்டத்தட்ட 25000 மஞ்சப்பைகளின் தேவையை பூர்த்தி செய்துள்ளன.

- **மீண்டும் மஞ்சப்பை – விரைவு இரயில் கண்காட்சி**
    - மாணவர்கள், சுய உதவி குழுக்கள் (SHGs) மற்றும் பொது மக்களுக்கு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, மாநிலம்

முழுவதும் செல்லும் வகையில் மஞ்சப்பை விரைவு ரயில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- **மஞ்சப்பை விருதுகள்**
    - ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதைத் தவிர்த்து சிறந்த முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் 3 சிறந்த பள்ளிகள், 3 சிறந்த கல்லூரிகள் மற்றும் 3 சிறந்த வணிக வளாகங்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மஞ்சப்பை விருதுகளை வழங்க உள்ளது. ஏப்ரல் 1, 2022 முதல் மார்ச் 31, 2023 வரையிலான ஒரு வருட காலத்தில் செய்யப்படும் முயற்சிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று விருதுகள் வழங்கப்படும். ஒருமுறை

பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகள் குறைப்பு மற்றும் தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், சுற்றுச்சூழல் கருத்து குறித்த நிகழ்வுகளில் பங்கேற்று சுற்றுச்சூழல் விருதுகள் பெற்றிருத்தல், உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடித்தல் போன்ற சுமார் 10–15 கருத்துருக்களை மையமாக கொண்டு, நிறுவனங்கள் இவ்விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட உள்ளன.

- **கார்பன் சமநிலை கொண்ட கோயம்பேடு சந்தை**
    - ஆசியாவின் மிகப்பெரிய சந்தை வளாகங்களில் ஒன்றான கோயம்பேடு சந்தை வளாகத்திற்கு கார்பன் சமநிலை அடைவதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது, இத்திட்டம் மற்ற

நகரங்கள் மற்றும் மாநிலங்களுக்கு முன்மாதிரியாக அமையும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைந்து தமிழ் நாடு மாசு கட்டுபாடு வாரியம் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னை மூலம் தயாரிக்கப்பட உள்ளது. இத்திட்டம் கோயம்பேடு சந்தை வளாகத்தின், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துதல், பசுமையான இடங்களை உருவாக்குதல், நிலையான பொருட்களின் பயன்பாடு, கார்பன் தடயங்களைக் குறைப்பதற்கான வழிகள், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் தடையை

அமல்படுத்துதல் மற்றும் சந்தையின் முழு செயல்பாட்டிலும் சுற்றுச்சூழல் பொறுப்பைக் கொண்டு வருவதை உறுதி செய்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியது. இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ.25 கோடி ஆகும்.

**தொழிற்சாலைகளுக்கு பசுமை மதிப்பீடு**

- தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் தொழிற்சாலைகளுக்கு பசுமை மதிப்பீடு செய்யும் திட்டத்தினை செயல்படுத்த முன்வந்துள்ளது. தொழிற்சாலைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளும் செயல்திறனை மதிப்பீடு செய்வதால் இத்திட்டம் சுற்றுச்சூழலுக்கு பெரிதும் பயனளிக்கும் முயற்சியாகும். மேலும், இத்திட்டம் ஆற்றல் திறன் மேம்பாடு (Energy efficiency), பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைத்தல், நீர் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (Renewable energy),

உற்பத்தி மற்றும் வட்டப் பொருளாதாரம் (Circular economy) சார்ந்த கழிவு மேலாண்மை போன்ற சிறந்த நடைமுறைகளுக்கு தொழிற்சாலைகளை ஊக்குவிக்கிறது. தொழிற்சாலைகளின் பசுமை மதிப்பீடு சுற்றுச்சூழல் தரத்தை அடைவதில் தொழிற்சாலைகளின் செயல்திறனை எளிதாக்குகிறது மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்கள் மற்றும் பிற புதுமையான முயற்சிகளை பின்பற்றுவதன் மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு, நிர்ணயிக்கப்பட்ட தரத்தை விட சிறப்பாக செயல்பட தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும். செயல்திறன் அடிப்படையில் தொழிற்சாலைகள் பிளாட்டினம், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் என மதிப்பிடப்படும்.

**தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணைப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

- மணலி தொழிற்சாலை பகுதியில் தற்போதுள்ள மாசு சுமையின் தன்மையை அறிவதற்கும், மேலும் இப்பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் விரிவாக்கம் மற்றும் இது போன்ற பிற தொழிற்சாலைகளுக்கு அப்பகுதியில் இடம் அளிக்க முடியுமா என்பது குறித்தான மாசு சுமை தாங்கும் திறன் (Carrying Capacity) ஆய்வினை திறன் வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி OA எண். 147/2020 தேதி 24.08.2022 இல் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 943 கோழிப் பண்ணைகளும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 70 கோழிப் பண்ணைகளும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கண்காணிப்பின் கீழ்

கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**எளிதாக வணிகம் செய்யும் கொள்கையின் கீழ் அதிகாரம் வழங்கல்**

- 13.04.2022, 23.08.2022 வாரிய ஆணையின்படி B1 & B2 வகை திட்டங்களின் கீழ் வரும் மணல் குவாரிகளுடன் சிறு கனிமங்களின் சுரங்கம் உட்பட 29 வகை தொழில்களுக்கு இயக்குவதற்கான மற்றும் புதுப்பிப்பதற்கான இசைவாணைகள் வழங்குவதற்காக இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்க்கு (கண்காணிப்பு) அதிகாரம் வழங்கியது. மேலும் அதை நீட்டிக்க வாரியத்தின் கூட்டத் தேதி 16.03.2023–ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**வாரிய பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு**

- வாரியத்தின் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு "Listening to Leaders"

என்ற திட்டத்தை வாரியம் ஏற்பாடு செய்கிறது. ஒவ்வொரு 2–வது மற்றும் 4–வது வியாழன் தோறும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு துறையில் வல்லுநர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகின்றனர். இதில் இதுவரை ஏழு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

## 10. நிலையான வளர்ச்சி இலக்குகள்

உலக அளவில் வறுமையை ஒழித்து, பூமியை பாதுகாத்து அனைத்து மக்களும் அமைதியுடனும், வளமுடனும் வாழ்வதற்காக அனைத்து நாடுகளும் ஒன்றுபட்டு செயல்படும் நோக்கத்துடன், நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) நிர்ணயிக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 2015–ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் உச்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை இந்த நிலையான வளர்ச்சி இலக்குகள் கொண்டுள்ளது. வரும் 2030 ஆம்

ஆண்டிற்குள் இந்த குறிக்கோள்களை அடைவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு தொடர்புடைய இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறியீடுகள், பின்வருமாறு வழங்கப்படுகிறது.

**இலக்கு–6:**"*சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்*" – என்ற இலக்கின் கீழ் உருவாக்கப்பட்ட குறிக்கோள் 6.3–ன் படி, 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளவில் நீரின் தரத்தினை உயர்த்துவதற்காக, நீர் மாசினை குறைத்தல், கழிவுகள் கொட்டப்படுவதை தவிர்த்தல், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் வெளியேற்றத்தை குறைத்தல், கழிவுநீர் வெளியேற்றத்தை பாதியாகக் குறைத்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

செயல்பாட்டு குழு–2:"ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம்" கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது.

இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக தொடர்பற்றதாக இருப்பினும் 6.3.2 என்ற குறியீடு மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது. "கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் தொழிற்சாலைகளின் சதவீதம்" என்ற ஒரு குறியீடாக 6.3.2 அமைக்கப்பெற்று, இது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகிறது.

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவீடுகளை எட்ட தொழிற்சாலைகள் அனைத்தும் தொழிற்கழிவுநீரை சுத்திகரிப்பு செய்கின்றனவா? என்பதனை உறுதி செய்வது இக்குறிக்கோளின் நோக்கமாக உள்ளது. நீரின் பயன்பாட்டை குறைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை முழுவதுமாக மறுசுழற்சி செய்யும் பொருட்டும், அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் பூஜ்ய திரவ வெளியேற்ற முறையினை அமைக்க வேண்டுமென அத்தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு

வாரியம் வலியுறுத்துகிறது. மேலும் இக்குறியீடு தேசியக் குறியீடாகும்.

**இலக்கு–9:** *"தொழிற்சாலைகளில் புதுமை மற்றும் உள்கட்டமைப்பு"* – என்ற இலக்கின் கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 9.2–ன் படி, 2030 ஆம் ஆண்டிற்குள் தேசிய அளவில் வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழிற்சாலைகளின் பங்களிப்பினை குறிப்பிடும்படியாக உயர்த்துதல் மற்றும் வளர்ந்த நாடுகளில் தொழிற்சாலைகளின் பங்களிப்பினை இரட்டிப்பாக்கல் ஆகும்.

செயல்பாட்டு குழு–5: "புதுமை, தொழில்மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி"–ன் கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக தொடர்பற்றதாக இருப்பினும் 9.4.1a என்ற குறியீடு மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது. "காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்களின்

எண்ணிக்கை" என்ற ஒரு குறியீடாக 9.4.1a அமைக்கப்பெற்று, இது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுப்புற காற்று தரத்தினை மாவட்ட தலைநகரம் மற்றும் முக்கிய தொழிற்சாலை பகுதிகளை உள்ளடக்கிய 87 இடங்களில் (தேசிய சுற்றுப்புற காற்றுதர கண்காணிப்பு திட்டத்தின் கீழ்–52 நிலையங்கள், தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்–34, நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையம்–1) கண்காணித்து வருகிறது. இதுதவிர காற்றின் தரத்தினை பெருநகரங்கள், நகர்புறங்கள் மற்றும் ஊரக பகுதிகளில் கண்காணிக்கும் வண்ணம், வாரியம் இன்னும் 25 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நுண்துகள்கள் அளவீட்டின் அடிப்படையில், நான்கு நகரங்கள், காற்று தரத்தினை அடையாத நகரங்களாக உள்ளன. காற்றின் தரத்தினை இந்த

நகரங்களில் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்த குறியீடு தேசிய குறியீடு இல்லை, இருப்பினும் மாநில அளவில் மாநில குறியீட்டு கட்டமைப்பின் கீழும் மாவட்ட அளவில் மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழும், கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**இலக்கு–12:** *"வளங்களை பொறுப்பான முறையில் நுகர்தல் மற்றும் உற்பத்தி செய்தல்"* என்ற இலக்கின் கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 12.4–ன் படி, வேதிப்பொருட்கள் மற்றும் அனைத்து கழிவுகளை சர்வதேச சட்ட அமைப்புக்கு சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் மேலாண்மை செய்யவும், கழிவுகள் அவற்றின் வாழ்நாள் சுழற்சி முழுக்க சுற்றுச்சூழல் பாதிக்காமல் மேலாண்மை செய்யவும் மற்றும் கழிவுகள் காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியவற்றில் வெளியேற்றப்படுவதை குறிப்பிடும் படியான அளவில் குறைத்து சுற்றுச்சூழல் மற்றும்

மக்கள் நலனில் ஏற்படும் பாதிப்பினை குறைத்தல் ஆகும். மேலும் இந்த இலக்கின் கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 12.5–ன் படி, 2030 ஆம் ஆண்டிற்குள், தடுத்தல், குறைத்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் மறு பயன்பாடு மூலம் கழிவுகளின் உற்பத்தியை குறைக்க வேண்டும் என்பதாகும்.

செயல்பாட்டு குழு–6: "நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி"–ன் கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக தொடர்பற்றதாக இருப்பினும் 12.4.2a, 12.5.4 மற்றும் 12.5.5 ஆகிய குறியீடுகள் மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது.

"மாநிலம் முழுவதும் கண்காணிக்கும் நிலையங்களை அமைத்து சுற்றுப்புற தரத்தினை கண்காணித்தல்" (குறியீடு எண்.12.4.2a), "தனி நபரால் உற்பத்தி செய்யப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் அளவு" (குறியீடு எண்.12.5.4), மற்றும்

"தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் உற்பத்தி மறுசுழற்சி விகிதாச்சாரம்" (குறியீடு எண்.12.5.5) ஆகிய குறியீடுகள் அமைக்கப்பெற்று, இவை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகின்றன.

நீர் தர கண்காணிப்பு நிலையங்கள், காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்கள், சுற்றுப்புற ஒலி தர கண்காணிப்பு நிலையங்கள் ஆகியவை மூலம் சுற்றுச்சூழலின் தரத்தை கண்காணிப்பது குறியீடு 12.4.2a–ன் நோக்கமாகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உள்நாட்டு நீர்நிலைகளின் தரத்தினை கண்காணிக்கும் பொருட்டு 175 கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. அவற்றில் 158 நிலையங்கள் தேசிய நீர்தர கண்காணிப்பு திட்டத்தின் கீழும் 17 நிலையங்கள் சென்னை மாநகர நீர்வழி கண்காணிப்பு திட்டத்தின் கீழும் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் சுற்றுப்புற காற்றுத் தரம் மாநிலத்தில் 87 நிலையங்களிலும் சுற்றுப்புற ஒலி மாசின் அளவு சென்னையில் 10 நிலையங்களிலும்

கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதற்கான தரவுகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இக்குறியீடான 12.4.2a மாவட்ட அளவில், மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தனிநபரால் உற்பத்தி செய்யப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை அளவிடுவது குறியீடு 12.5.4–ன் நோக்கமாகும். இக்குறியீடு தேசிய குறியீடாகும். இது மாவட்ட அளவிலும், மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் உற்பத்தி மறுசுழற்சி விகிதாச்சாரத்தை கண்டறிவது குறியீடு 12.5.5–ன் நோக்கமாகும். இக்குறியீடு தேசிய குறியீடாகும். இது மாவட்ட அளவிலும், மாவட்ட குறியீட்டு கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகிறது

**இலக்கு–13:** "*காலநிலை நடவடிக்கை*" என்ற இலக்கின் கீழ் வகுக்கப்பட்ட குறிக்கோள் 13.3–ன் படி கல்வி அறிவினை மேம்படுத்துதல், விழிப்புணர்வை அதிகரித்தல், தனிநபர் மற்றும் நிறுவனங்களின் தரத்தை, பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துதல், தகவமைத்துக் கொள்ளுதல், தாக்கத்தை குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை செய்தல் ஆகியவற்றை உயர்த்துதல்.

செயல்பாட்டு குழு–7: "நிலையான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்"–ன் கீழ் இந்த இலக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் நேரடியாக தொடர்பற்றதாக இருப்பினும் 13.3.2 என்ற குறியீடு மூலம் மறைமுகத் தொடர்புடையதாக உள்ளது.

"மாநிலத்தில் காலநிலை மாற்ற நடவடிக்கைகளை தகவமைக்க, தாக்கத்தை குறைக்க மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்த, நிறுவனங்கள் மற்றும்

தனிநபர்களின் திறன்களை வலுப்படுத்துதல்" என்ற குறியீடாக 13.3.2 அமையப்பெற்று, இது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகிறது.

மக்களின் திறனை மேம்படுத்துதல் குறியீடு 13.3.2–ன் நோக்கமாகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. மேலும் வாரியம் தனது ஊழியர்களை தொழில்நுட்ப நிபுணத்துவ நிறுவனங்கள் நடத்தும் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்படி ஊக்குவிக்கின்றது. அது மட்டுமல்லாமல் தனது மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மூலம் பொது மக்களிடையே கழிவு மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் குறிப்பாக பண்டிகை காலங்களில் மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

**சிவ. வீ. மெய்யநாதன்**
**சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்**




சுற்றுச்சூழல் தினமான 05.06.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மதுரை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு பசுமை விருது வழங்கப்பட்டது.






பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதன் ஒரு பகுதியாக, உலக சுற்றுச்சூழல் தினத்தன்று (05.06.2022) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 25 மின் வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்



25.09.2022 அன்று தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் ஒருங்கிணைப்புடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கான மாற்றுப் பொருட்கள் குறித்த தேசிய கண்காட்சி துவக்கம்




10.11.2022 அன்று மாண்புமிகு பொறுப்பு தலைமை நீதிபதி ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் இல்லா சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தினை தொடங்கி வைத்தார்




தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் 09.12.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது




தமிழ்நாட்டின் நகர்புறப் பகுதிகளின் வெப்பநிலையை குறைப்பது தொடர்பான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 03.03.2023 அன்று நடைபெற்ற தமிநாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் முதல் கூட்டம்



தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தின் ஏற்பாட்டின் படி காலநிலை மாற்ற நிபுணர் குழுவினர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை 24.03.2023 அன்று சந்தித்தனர்




அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.